ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம :

# நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு)

(மலர்-53) Aug (2) / 2009



நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

'ஸ்ரீ அஹோபில தாஸன்' க.ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு

## உட்பொதிவு


1. ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம் (ஸ்வாமி பராசரபட்டர் பாஷ்யம்)…………………......3

2. ஸ்ரீபாஷ்யம் ……………………………………………………………………....10

3. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் ……………………………………………………...17

4. ஸ்ரீவசனபூஷணம்………………………………………………………………..18

5. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)………..……………………………………..26

6. திருமாலை ……………………………………………………………………....29

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபராசரபட்டர் அருளிச் செய்த

# ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யம்

(பகுதி – 30)

## 74. மதுஸூதந:

மது என்னும் அசுரனை அழித்தவன். அனைத்தையும் கட்டுப்படுத்துவதாலும், அசுரர்களை அழித்து எதிர்ப்பு இல்லாத ஐச்வர்யங்களை அளிப்பதாலும் அவன் மதுஸூதனன் எனப்படுகிறான். மகிழ்வித்தல் என்னும் பொருளுடைய "நந்தி" என்னும் வினையுடன், "ல்யு" என்பது இணையும்போது "நந்தன்" என்பது பிறக்கிறது. இதே போன்று அழித்தல் என்னும் பொருள் கொண்ட "ஸூத:" என்னும் வினையுடன், "ல்யு" என்பது சேர்வதால் "ஸூதன்", என்பது உண்டாகிறது. இது போன்றே நந்தந: (530), வர்த்தந: (262), மதந:, ஸங்கர்ஷண: (556), ஜநார்த்தன: (128) போன்ற திருநாமங்களும் இறுதியில் "ல்யு" என்பதைக் கொண்டவையே ஆகும். மகாபாரதம் உத்யோக பர்வம் (68-4) – ஸர்வ தத்வ ந்யாச்சைவ மதுஹா மதுஸூதந - அனைத்து தத்துவங்களையும் தன்னிடம் வைத்துள்ளதால் மதுஹா என்றும், மதுஸூதனன் என்றும் அழைக்கப்படுகிறான் – என்றது காண்க. அல்லது நித்யசூரிகளின் இந்த்ரியங்களை எந்தவிதமான தடையும் இல்லாமல் தன்வயப்படுத்தி வைத்துள்ளதாலும் அவனுக்கு மதுசூதனன் என்னும் பெயர் உள்ளதாகக் கூறுவார்கள். இதனை – மது: இந்த்ரியநாமா ஸ ததோ மதுநிஷூதன: - இந்த்ரியங்களுக்கு மது என்று பெயர். இவற்றைத் தன்பக்கம் இழுப்பதால் மதுஸூதனன் எனப்படுகிறான் – என்றது காண்க. அஸுரம் ஹந்தி - மதுவை அழிக்கிறான்.

## 75. ஈச்வர:

ஆள்கின்றவன். போக இடமாக உள்ள எல்லையற்ற விண்ணுலகில், தான் விரும்பும் அனைத்தையும் எந்தவிதமான தடையும் இல்லாமல் பெற்று மகிழ்ந்தபடி உள்ளவன். இதனால் ஈச்வரன் எனப்படுகிறான்.

- சாந்தோக்ய உபநிஷத் (8-1-5) – ஸத்யகாம: ஸத்யஸங்கல்ப: – அவனுடைய விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறுகிறது, தடையற்ற உறுதியுள்ளவன்.

- யத்ர காம அகமோ வசீ - தான் விரும்பும் இடங்கள் அனைத்திற்கும் செல்ல வல்லவன்; அனைவரையும் தன் வசம் வைத்துள்ளவன்.

## 76. விக்ரமீ

பராக்ரமம் மிகுதியாக உள்ளவன். தான் செய்ய நினைப்பதற்குத் தடை ஏற்பட்டது என்ற பேச்சுக்கே வாய்ப்பு இல்லாமல், தான் எண்ணியதைச் செய்து முடிக்கும் இயல்பு கொண்டவன். இதனால் இவன் விக்ரமீ எனப்படுகிறான். மிகுதி, அனைவராலும் போற்றப்படும் இயல்பு, நித்யம் என்னும் அர்த்தங்களை அளிக்கும் பெயர்ச் சொல்லுடன், எப்போதும் "இனி" என்பது சேர்க்கப்படும் என்றுள்ள விதிக்கு ஏற்றபடி இங்கு விக்ரமீ வந்துள்ளது (விக்ரம + இனி = விக்ரமீ). விஷ்ணுபுராணம் (5-22-15) – மனஸா ஏவ ஜகத் ஸ்ருஷ்டிம் ஸம்ஹாரம் கரோதி ய: தஸ்ய அரிபக்ஷ க்ஷபணே கியாந் உத்யம விஸ்தர: - எந்த ஒரு பகவான் தன்னுடைய ஸங்கல்பம் மூலம் மட்டுமே அனைத்தையும் படைத்து அழிக்கவும் செய்யவல்லவனோ, அவன் தனது விரோதிகளின் கூட்டத்தை அழிக்க என்ன பெரிய முயற்சி செய்ய வேண்டும்? நினைத்தவுடன் அழித்துவிடுவான் – என்றது.

## 77. தந்வீ

வில்லை ஏந்தியன். ஒப்பற்ற பராக்ரமம் அவனுக்கு உள்ளது என்ற திருநாமத்திற்கு ஏற்ப சார்ங்கம் என்னும் பெயர் கொண்ட தெய்வீகமான வில் எப்போதும் உள்ளது என்பதை தந்வீ என்னும் திருநாமம் கூறுகிறது. வ்ரீஹி என்று தொடங்கும் பதங்களின் வரிசையில் உள்ள சொற்களின் இறுதியில் "உடையவன்" என்னும் பொருளில், "இனி" என்பதுடன் வரும். மற்ற திவ்ய ஆயுதங்கள் போன்று வில்லையும் கொண்டவன். கீழே உள்ள பல வரிகள் காண்க:

- இராமாயணம் யுத்தகாண்டம் (120-15) - சார்ங்க தந்வா ஹ்ருக்ஷீகேச: புருஷ: புருஷோத்தம: அஜித: கட்க த்ருக் விஷ்ணு: க்ருஷ்ண: ச ஏவ ப்ருஹத் பல: - சார்ங்கம் என்ற வில்லை எப்போதும் உடையவன். அவனே ஹ்ருஷீகேசன், புருஷன், புருஷோத்தமன். அவன் கையில் கத்தியை வைத்துள்ளான். அவனை யாரும் வெல்ல இயலாது. மிகவும் வலிமையான விஷ்ணுவும், க்ருஷ்ணனும் அவனே ஆவான்.

- இராமாயணம் உத்தரகாண்டம் (107-9) - சரா: நாநாவித ஆகாரா: தனு: ஆயத விக்ரஹம் அநுவ்ரஜந்தி காகுத்ஸ்தம் ஸர்வே புருஷ விக்ரஹா: - காகுத்த வம்ஸத்தில் அவதரித்த ஸ்ரீராமன் இந்த உலகை விட்டுத் தனது இருப்பிடம் திருப்பியபோது, பல வடிவங்களில் இருந்த அம்புகள் மற்றும் கோதண்டம் என்னும் நீளமான வில் ஆகியவை மனித உருவம் எடுத்து அவனைத் தொடர்ந்தன.

- ததோ ராஜன் பகவான் உக்ர தந்வா நாராயண: ப்ரபவ: ச அப்யய: ச - அரசனே! இதனால் பயங்கரமான வில்லை ஏந்திய உலகின் உற்பத்தி மற்றும் ஸம்ஹாரம் ஆகியவற்றின் காரணம் அவனே ஆவான்.

- விஷ்ணு புராணம் (1-22-70) - பூதாதிம் இந்த்ரியாதிம் ச த்விதா அஹங்காரம் ஈச்வர: பிபர்த்தி சங்க ரூபேண சார்ங்க ரூபேண ச ஸ்திதம் – பஞ்சபூதங்களின் காரணமான தாமஸ அஹங்காரம், இந்த்ரியங்களின் காரணமான ஸாத்விக அஹங்காரம் ஆகிய இரண்டையும் ஸர்வேச்வரன் சங்கு மற்றும் சார்ங்க வடிவில் வைத்துள்ளான்.

## 78. மேதாவீ

பேரறிஞன். எல்லையற்றதும், நித்யமாக உள்ளதும் ஆகிய தனது மேன்மைகளுக்கு ஏற்றபடி, எந்த ஓர் உதவியையும் எதிர்பாராமல் இயல்பாகவே அனைத்தையும் அறிந்துள்ளவன். அஷ்டாத்யாயீ (5-2-121) – அஸ் மாயாமேதா ஸ்ரஜோ விநி: - அஸ் என்று முடிகின்ற சொல்லான யசஸ், மாயா, மேதா, ஸ்ரக் போன்றவற்றின் இறுதியில் “உடையவன்” என்ற பொருளில் முன்னர் கூறியபடி “விநி” என்ற பதம் வரும் (மேதா + இனி = மேதாவீ).

## 79. விக்ரம:

கருடனில் ஸஞ்சாரம் செய்பவன். “வி” என்பது பறவைகளின் அரசனும், வேதங்களின் ஸ்வரூபனாகவும் உள்ள கருடனைக் குறிக்கும். க்ரமணம் = கருடன் மீது அமர்ந்தபடி, தனது பொருட்டு இங்கும் அங்குமாகச் ஸஞ்சாரம் செய்பவன், தைத்திரீய நாராயணவல்லீ (1-24) - தத் புருஷாய வித்மஹே ஸுவர்ணபக்ஷாய தீமஹீ தந்தோ கருட: ப்ரசோதயாத் – புருஷோத்தமான ஸ்ரீமந்நாராயணனுக்கு ஆட்பட்டவன், அழகான சிறகுகள் கொண்டவன், இப்படிப்பட்ட கருடனை உபாஸிக்கிறோம். இப்படிப்பட்ட த்யானத்தைக் கருடன் மேலும் தூண்டுவானாக – என்றது. ஸௌபர்ணஸூக்தம் போன்ற க்ரந்தங்கள் மூலமாகக் கருடனைப் பற்றி மேலும் அறியலாம்.

## 80. க்ரம:

ஐச்வர்யம் நிறைந்தவன். இப்படியாக நித்யமான ஐச்வர்யம் உடையவன் என்பதால், பகவான் மிகப் பெரும் செல்வத்தின் அதிபதி ஆவான். க்ரம என்ற வினையானது ஆத்மநேபதி என்னும் பிரிவைச் சார்ந்தது. அப்போது அதற்குச் செல்வந்தனாக உள்ள நிலை என்னும் பொருள் கொண்ட தாயனம் என்று அர்த்தம்.

## 81. அநுத்தம:

தனக்கு மேல் உத்தமமாக ஏதும் இல்லாதன். அனைத்துவிதங்களிலும் சிறந்தவன். கீழே உள்ள பல வரிகள் காண்க:

- யஜுர் அஷ்டகம் (2-8-9) - தஸ்மாத் ஹ அந்யத் ந பரம் கிஞ்சந ஆஸ - இவனை விட மேம்பட்டது எதுவும் இல்லை.
- யஜுர் அஷ்டகம் (2-7) - தேந அர்ஹதி ப்ரஹ்மணா ஸ்பர்த்திதும் க: - பரம்பொருளுடன் யார்தான் போட்டியிட முடியும்?
- யஜுர் அஷ்டகம் (2-7) - தேந க: அர்ஹதி ஸ்பர்த்திதும் – அவனுடன் யாரால் போட்டியிட இயலும்?
- கீதை (7-7) - மத்த: பரதரம் ந அந்யத் கிஞ்சித் அஸ்தி தநஞ்ஜய – அர்ஜுனா! என்னை விட உயர்ந்தது என்று ஏதும் இல்லை. நானே உயர்ந்தவன்.
- பரம் ஹி அபரம் ஏதஸ்மாத் விச்வரூபாத் ந வித்யதே – அனைத்துமாக உள்ள பரமாத்மாவைக் காட்டிலும் மேம்பட்டது ஏதும் இல்லை.

## 82. துராதர்ஷ:

எதிர்த்து நிற்பவர்கள் என யாரும் இல்லாதவன். கீழே உள்ள பல வரிகள் காண்க:

- சாந்தோக்ய உபநிஷத் (3-14-2) - மனோமய: ப்ரணாசரீர: பாரூப ஸத்யஸங்கல்ப: ஆகாசாத்மா ஸர்வகர்மா ஸர்வகாம: ஸர்வகந்த: ஸர்வரஸ: ஸர்வம் இதம் அப்யாத்த அவர்சீ அநாதர: - தூய மனம் மூலம் மட்டுமே அறியத்தக்கவன்; உலகில் உள்ள ப்ராணன்களைத் தனது சரீரமாக உடையவன்; ஜ்யோதிரூபமாக உள்ளவன்; உறுதியான ஸங்கல்பம் கொண்டவன்; தான் ப்ரகாசமாக உள்ளது போன்று மற்றவர்களையும் ப்ரகாசிக்கச் செய்பவன்; அனைத்தும் இவனது செயலால் உண்டாகின்றன; விரும்பத்தக்க அனைத்தையும் உடையவன்; உயர்ந்த நறுமணம் கொண்டவன்; உயர்ந்த சுவை உடையவன்; கீழே கூறப்பட்ட அனைத்தையும் கொண்டு மங்களகரமாக உள்ளவன்; அனைத்தையும் கொண்டுள்ளதால், எதற்காகவும் மற்றவர்களை எதிர்பாரால் உள்ளவன்; மற்றவர்களை ஆதரிக்க வேண்டிய நிலை இல்லாதவன்.
- கம்பீர: பரமோ தேவ: - அனைவரிலும் மேம்பட்ட தேவன். கம்பீரம் உள்ளவன்.
- இராமாயணம் ஆரண்ய காண்டம் (47-32) - மஹோாததிம் இவ அக்ஷோப்யம் – ஒன்றாலும் கலக்க இயலாத பெரிய ஸமுத்திரம் போன்றவன்.
- காம்பீர்யாத் ஸாகரோபமம் - கம்பீரம் காரணமாக கடல் போன்று ஆழங்காண இயலாதவன்.
- கட உபநிஷத் (3-9) - தத்விஷ்ணோ: பரமம் பதம் - அது விஷ்ணுவின் அனைத்திற்கும் மேம்பட்ட இடம்.
- தைத்திரீய நாராயணவல்லீ (1-2) - தத் அக்ஷரே பரமே வ்யோமன் – பரப்ரஹ்மமானது அழிவற்றதாகவும், பரமாகாசம் எனப்படுவதும் ஆகிய பரமபதத்தில் உள்ளது.
- புருஷஸூக்தம் (18) – தே ஹ நாகம் – அவர்கள் துக்கத்தின் தொடர்பு அற்ற பரமபதத்தை அடைகின்றனர்.
- கீதை (15- 6) - தத் தாம பரமம் மம – அந்தப் பரமபதம் எனது உயர்ந்த இடமாகும்.
- மஹாபாரதம் – திவ்யம் ஸ்தாநம் அஜரம் ச அப்ரமேயம் - அந்த ஸ்ரீவைகுண்டம் ஒளியுள்ளது, கிழத்தன்மை அற்றது, எல்லையற்ற மேன்மை உடையது.

- இராமாயணம் பாலகாண்டம் (15-33) – ஸ்வலோகம் ஆகச்ச கதஜ்வர: சிரம் - நீண்டகாலம் உலகில் இருந்து இதன் துன்பங்கள் நீக்கியதால், தாபம் இல்லாதவனாக, உனது லோகமான பரமபதத்திற்கு வருவாயாக.
- இராமாயணம் உத்தர காண்டம் (110-13) – விவேச வைஷ்ணவம் தேஜ: – அதன் பின்னர் ஒளிமயமான பரமபத்திற்குள் மீண்டும் புகுந்தான்.
- விஷ்ணு புராணம் (4-1-84) – காலாமுஹுூர்த்தாதி மய: ச கால: ந யத் விபூதே: பரிணாமஹேது: - முஹுூர்த்தம் போன்ற பிரிவுகள் கொண்ட காலம் என்பது பரமாத்மாவின் செல்வம் எனப்படும் லோகத்தில் எந்தவிதமான மாற்றங்களையும் உண்டு பண்ணுவதற்கான காரணமாக இருப்பதில்லை.
- தேஷாம் தத் பரமம் ஸ்தாநம் – முக்தர்களுக்கான உயர்ந்த இடம் ஸ்ரீவைகுண்டமே ஆகும்.

மேலே கூறப்பட்ட பல ப்ரமாணங்கள் மூலம் ஸ்ரீவைகுண்டம் என்பது காலத்திற்கு உட்பட்டதல்ல, அழிவில்லாதது, மாறுபாடுகள் இல்லாதது, மூலப்ரக்ருதிக்கு அப்பாற்பட்டது, நித்யமானது, அங்கு செல்பவர்கள் மீண்டும் திரும்பாத தன்மை கொண்டது, எம்பெருமானின் ஸ்வரூபம் மற்றும் குணங்கள் போன்று இதுவும் நித்யமானது என்று அறியலாம்.

- சாந்தோக்ய உபநிஷத் (6-2-1) – ஏக மேவ அத்விதீயம் – இது மட்டுமே இருந்தது, இரண்டாவது இல்லை.
- யஜுர் அஷ்டகம் (2-8-9) - ந அஸத் ஆஸீத் நே ஸத் ஆஸீத் ததாநீம் – அப்போது சேதனமும் இல்லை, அசேதனமும் இல்லை.

மேலே உள்ள வரிகளில் ப்ரஹ்மம் மட்டுமே இருந்தது என்று கூறப்பட்டதால், ஸ்ரீவைகுண்டம் என்பது ஒரு காலத்தில் இல்லையோ என்று சந்தேகம் எழலாம். அப்படி இல்லாமல், நித்யமாக உள்ள ஸ்ரீவைகுண்டத்தில் எம்பெருமான் ஸ்ரீதேவி மற்றும் பூதேவியுடன் கூடியவனாக உள்ளான் என்று அறியவேண்டும்.
பர்யங்கவித்யை என்ற கௌஷீதகீ உபநிஷத் பகுதியில் பின்வருமாறு உள்ளது - இரத்தினமயமான படுக்கை ஒன்று உள்ளது. அதில் எம்பெருமான் வீற்றுள்ளான். அவனது திருவடிகளில் அனந்தன், கருடன், விஷ்வக்சேநர் போன்ற பல நித்யஸூரிகள் எல்லையற்ற கைங்கர்யங்களைச் செய்தபடி உள்ளனர். அந்த எம்பெருமான் அனைத்து உலகிற்கும் சக்ரவர்த்தியாக வீற்றிருந்து, நன்மைகளைச் செய்தபடி உள்ளான். இப்படியாக வேதங்களில் உள்ள ரஹஸ்யங்களை நாம் அறியலாம் .

வாயு பகவான் உரைத்த சிவபுராணத்தில் கீழே உள்ள வரிகள் காணலாம்:

வைகுண்டே து பரே லோகே ஶ்ரீயா ஸார்தம் ஜகத்பதி:
ஆஸ்தே விஷ்ணு: அசிந்த்யாத்மா பக்தை: பாகவதை: ஸஹ

**இதன் பொருள்** - ஸ்ரீவைகுண்டம் எனப்படும் மிகவும் சிறந்த லோகத்தில் மஹாலக்ஷ்மியுடன் சேர்ந்தபடியே உலகின் அதிபதியாக உள்ளவனும், ஒப்பற்ற ஸ்வரூபம் கொண்டவனும் ஆகிய ஸ்ரீமந்நாராயணன் உள்ளான். அவன் பாகவதர்கள், பக்தர்கள் சூழ வீற்றுள்ளான். மேலும் விஷ்ணுதத்வம் – பஞ்சசக்திமயோ தேவ: பஹிர்லோகேச்வர: ஆஸ்தே ஸ்வாநந்தபாவேந பரமவ்யோம்நி ஸுஸ்தித: - உலகங்களுக்கு ஈச்வரர்களாக உள்ளவர்களின் ஈச்வரனாக இவன் உள்ளான்; எல்லையற்ற பேரானந்தத்தை அனுபவித்தபடி, பரமாகாசம் என்னும் ஸ்ரீவைகுண்டத்தில் வீற்றுள்ளான் - என்றது காண்க.

...தொடரும்

அழகியமணவாளன் திருவடிகளே சரணம்
ஸ்வாமி பராசரபட்டர் திருவடிகளே தஞ்சம்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

பகவத் ராமானுஜர் அருளிச் செய்த

# ஸ்ரீபாஷ்யம்

(பகுதி – 53)

## அத்யாயம் – 4 - பல அத்யாயம்

**குறிப்பு** - ப்ரஹ்மத்தை அடையும் ஸாதனமான வித்யாரூப உபாஸனம் கடந்த அத்யாயத்தில் விளக்கப்பட்டது. அந்த வித்யையின் ஸ்வரூபம் ஆராயப்பட்டு, அதன் பலன் இங்கு விளக்கப்படுகிறது. இதில் உள்ள நான்கு பாதங்கள் பின்வருமாறு:

- ஆவ்ருத்தி பாதம் – உபாஸகனின் கடைசி சரீரத்தில் புண்யபாவங்கள் ஒட்டுவதில்லை என்பதும், பக்தியும் ஆராயப்படுகின்றன.
- உத்க்ராந்தி பாதம் - முக்தி பெறும் ஜீவன் சரீரத்திலிருந்து எவ்விதம் கிளம்புகிறான் என்பது ஆராயப்படுகிறது.
- கதி பாதம் – சரீரத்தை விட்டுக் கிளம்பிய ஜீவன் பரமபதத்திற்கு அழைத்துச் செல்லப்படுவதாகிய வித்யாபலம் கூறப்படுகிறது.
- முக்தி பாதம் – ப்ரஹ்மத்தை அடைந்த முக்தன் பெறும் ஐச்வர்யம் கூறப்படுகிறது.

### அதிகரணம் – 1 – ஆவ்ருத்யதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – ஆயுள் முடியும்வரை உபாஸனத்தைப் பலமுறை அனுஷ்டிக்க வேண்டும் என்பது கூறப்பட உள்ளது.

4-1-1 ஆவ்ருத்தி: அஸக்ருத் உபதேசாத்

**பொருள்** - எம்பெருமானைக் குறித்த அறிவு என்பதே பலமுறை சிந்திக்கப்பட வேண்டிய த்யானமாகும். இப்படியே உபதேசிக்கப்பட்டன.

**விஷயம் –** கடந்த அத்யாயத்தில் மோக்ஷ ஸாதனமான ப்ரஹ்மவித்யை மற்றும் அதன் அங்கங்கள் ஆகியவை ஆராயப்பட்டன. இந்த அத்யாயத்தில் அந்த வித்யையின் ஸ்வரூபத்தைப் பற்றி ஆராய்ந்து, அதன் பின்னர் அந்த வித்யையின் பலன் பற்றியும் ஆராயப்பட உள்ளது.

**சந்தேகம் -** கீழே உள்ள பல வேத வரிகளில் கூறப்பட்டுள்ள ப்ரஹ்மத்தை அடைவது பற்றிய வேதனங்கள் (அறிந்து கொள்ளும் செயல்) ஒருமுறை அனுஷ்டிக்கப்பட்டால் போதுமானதா அல்லது பல தடவை செய்யவேண்டுமா?

- தைத்திரீயம் (2-1) - ப்ரஹ்மவிதாப்நோதி பரம் – ப்ரஹ்மத்தை அறிந்தவன் உயர்ந்ததை அடைகிறான்.
- ச்வேதாஸ்வதர உபநிஷத் (3-8) - தமேவ விதித்வாதி ம்ருத்யுமேதி - ப்ரஹ்மத்தை அறிவதால் மட்டுமே மரணத்தைக் கடந்து செல்கிறான்.
- முண்டக உபநிஷத் (3-2-9) - ப்ரஹ்ம வேத ப்ரஹ்ம ஏவ பவதி – ப்ரஹ்மத்தை அறிந்தவன் ப்ரஹ்மமாகவே ஆகிறான்.
- முண்டக உபநிஷத் (3-1-3) - யதா பச்ய: பச்யதே ருக்மவர்ணம் - பொன்நிறமான ப்ரஹ்மத்தைக் கண்டவன்.

**பூர்வபக்ஷம்** - ஒருமுறை அறிந்து கொண்டாலே போதுமானது, ஏன்? பலமுறை அறிய வேண்டும் என்பதற்கான ப்ரமாணம் ஏதும் இல்லை. இதனை முண்டக உபநிஷத் (3-2-9) – ப்ரஹ்ம வேத ப்ரஹ்ம ஏவ பவதி - என்பதன் மூலம் அறியலாம். உமியானது நீங்கும்வரை நெல்லைக் குத்திக்கொண்டே இருக்கவேண்டும் என்ற நியாயம் போன்று, இங்கு ப்ரஹ்மத்தைக் காணும் வரையில் அதனைக் குறித்து அறிந்தபடியே இருக்க வேண்டும் என்ற வாதம் செய்வது சரியல்ல. இதன் காரணம், நேரடியாகக் காண்பதற்கு உதவும் உபாயமாக வேதாந்தங்களின் தன்மை இல்லை. ஜ்யோதிஷ்டோமம் போன்ற கர்மங்கள் மற்றும் வேதனம் போன்று வேதாந்தங்களில் கூறப்பட்டவைகள் முதலானவை அனைத்தும் பகவத் ஆராதனமாகவே கொள்ளப்பட வேண்டும்; இத்தகைய ஆராதனை மூலம் மனமகிழ்ச்சி அடையும் எம்பெருமான் பலவிதமான புருஷார்த்தங்கள், தர்மம், காமம், அர்த்தம் மற்றும் மோக்ஷங்களைப் பலனாக அளிக்கிறான். இப்படியாக அல்லவோ ப்ரஹ்மசூத்திரம் (3-2-37) – பலமத உபபத்தே - என்று கூறியது? ஆகவே ஜ்யோதிஷ்டோமம் போன்றவற்றை எவ்விதம் ஒருமுறை மட்டுமே அனுஷ்டிக்கிறோமோ அது போன்று, வேதனம் போன்றவற்றையும் (ப்ரஹ்மத்தை அறிதல்) ஒருமுறை அனுஷ்டித்தாலே போதுமானது.

**ஸித்தாந்தம் -** அப்படி அல்ல. மோக்ஷ ஸாதனமாக சாஸ்த்ரங்களில் கூறப்படும் ப்ரஹ்ம ஞானம் என்பது பலமுறை அனுஷ்டிக்கப்படவேண்டியதே ஆகும். ஏன்? இப்படியே கூறப்பட்டுள்ளது. த்யானம், உபாஸனம் ஆகியவற்றுடன் ஒத்த பொருள் கொண்டதாகவே வேதனம் என்பதும் கூறப்பட்டது. இவ்விதம் ஒத்த பொருள் கொண்டதாக வேதனம் உள்ளது என்பதை, உபாஸ்தி மற்றும் த்யாயதி போன்ற பதங்கள் மூலம் வேதனம் உணர்த்தப்படுவதன் வாயிலாக அறியலாம். இந்த வரிகள் சாந்தோக்ய உபநிஷத்தில் (3-18-1) – மநோ ப்ரஹ்ம இதி உபாஸீத - மனதை ப்ரஹ்மமாகவே உபாஸிக்கவேண்டும் - என்று தொடங்கியதில் காணலாம் (இங்கு உள்ள உபாஸனை என்ற பதம் காண்க). இந்தப் பகுதி சாந்தோக்ய உபநிஷத்தில் (3-18-3) – பாதி ச தபதி ச கீர்த்யா யசஸ ப்ரஹ்ம வர்ச்சஸேந ய ஏவம் வேத - யார் இப்படி அறிந்து கொள்கிறானோ அவன் ப்ரஹ்மதேஜஸ் அடைகிறான் - என்று முடிகிறது (இங்கு இறுதியில் வேதன சப்தம் காண்க). மேலும் சாந்தோக்ய உபநிஷத் (4-1-4) – யஸ்தத்வேத யத் ஸ வேத ஸமயைதத் உக்த: - ரைக்வர் எதனை அறிகிறாரோ அதனையே மற்றும் உள்ள அனைவரும் அறிகின்றனர் - என்று தொடங்கப்பட்ட வரியில், வேதன சப்தம் உள்ளது. இந்தப் பகுதியானது முடியும் இடத்தில் சாந்தோக்ய உபநிஷத் (4-2-2) – அநும ஏதாம் பகவோ தே வதாம் சாதியாம் தேவதாம் உபாஸ்ஸே – மூத்தவரே! எந்த தேவதையை நீவிர் உபாஸனை செய்கின்றீர்களோ அதனை எனக்கும் உபதேசிக்கவேண்டும் - என்று, உபாஸன பதம் கொண்டு முடிக்கப்பட்டது காண்க. மேலும் கீழே உள்ள பல வரிகள் மூலம், வேதனம் என்பது த்யானம் என்பதை அறிக:

- தைத்திரீயம் (2-1) - ப்ரஹ்மவிதாப்நோதி பரம் – ப்ரஹ்மத்தை அறிந்தவன் உயர்ந்ததை அடைகிறான்.
- ப்ருஹத் உபநிஷத் (2-4-5) - ஆத்மா வா அரே த்ருஷ்டவ்ய: ச்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய: – உயர்ந்த அந்தப் பரமாத்மாவே காணப்படவேண்டியது, த்யானிக்கப்படவேண்டியது, எண்ணப்பட வேண்டியது ஆகும்.
- முண்டக உபநிஷத் (3-1-8) - ததஸ்து தம் பச்யதே நிஷ்கலம் த்யாயமாந: - த்யானத்தில் உள்ளவன் அவனைக் காண்கிறான்.

த்யானம் என்பது இடைவிடாமல் நினைத்தபடி இருக்கும் நிலை ஆகும். த்யானம் என்பது வெறும் நினைவு மட்டும் அல்ல. உபாஸனை என்பதும் இது போன்ற தன்மையே ஆகும். மனமானது ஒரே சிந்தனையில் நிலை நிற்பதே உபாஸனை என்று கூறப்படுவதைக் காணலாம். ஆக இந்த இரண்டும் ஒரே பொருள்களைக் கொண்டவையாக உள்ளன. எனவே வேதனம் என்பது இவற்றைப் போன்று விடாமல் அனுஷ்டிக்கப்பட வேண்டும் என்றாகிறது. இதனையே கீழே உள்ள வரிகள் உணர்த்துகின்றன:

- முண்டக உபநிஷத் (3-2-9) - ப்ரஹ்ம வேத ப்ரஹ்ம ஏவ பவதி - ப்ரஹ்மத்தை அறிபவன் அதனையே அடைகிறான்.
- ச்வேதாஸ்வதர உபநிஷத் (1-8) - ஜ்ஞாத்வா தேவம் முச்யதே ஸர்வபாசை: - அதனை அறிந்தவன் அனைத்துப் பாவங்களில் இருந்தும் விடுபடுகிறான்.

4-1-2 லிங்காத் ச

**பொருள்** - இதனை ஸ்ம்ருதியிலும் காணலாம்.

**ஸித்தாந்தம்** - லிங்கம் என்பது ஸ்ம்ருதியைக் குறிக்கும் (லிங்கம் என்பது அனுமானம் என்பதாகும். ஸ்ம்ருதியைக் கொண்டு ச்ருதியை அனுமானம் செய்வதால், ஸ்ம்ருதியானது லிங்கம் எனப்படும்). ப்ரஹ்ம வித்யை பலமுறை செய்யப்பட வேண்டியது என்பதை ஸ்ம்ருதியும் கூறுகிறது. மோக்ஷ ஸாதனமான வேதனம் என்பது, இடைவிடாமல் நினைப்பது போன்றதே என்பதை ஸ்ம்ருதியில் காணலாம். ஸ்ரீவிஷ்ணு புராணம் (6-7-91) தத்ரூப ப்ரத்யயே சைகா ஸந்ததிச் சாந்ய நிஸ்ஸ்ப்ருஹா தத் த்யாநம் ப்ரதமை: ஷட்பி: அங்கை: நிஷ்பாத்யதே ததா - தாரணை மூலம் கிட்டுகின்ற ப்ரஹ்மத்தின் திருமேனி குறித்த ஞானம் என்பதில், வேறுவிதமான அறிவு கலக்காமல் ஒரே எண்ணமாக இருத்தல் என்பது த்யானம் எனப்படுகிறது. அது, இதற்கு முன்பாக உள்ள யமம், நியமம், ஆஸநம், ப்ராணாயாமம், ப்ரத்யாஹாரம் மற்றும் தாரணை ஆகிய ஆறு அங்கங்களாக ஏற்படுகிறது என்றது. ஆகவே வேதனம் என்பது ஒருமுறை அல்லாமல், பலமுறை செய்யப்பட வேண்டியது என்றாகிறது.

ஆவ்ருத்த்யதிகரணம் ஸம்பூர்ணம்

## அதிகரணம் – 2- ஆத்மத்வோபாஸநாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - தன்னுடைய ஆத்மாவாகவே ப்ரஹ்மத்தை உபாஸகன் உபாஸிக்கவேண்டும் என்பது கூறப்பட உள்ளது.

4-1-3 ஆத்மேதி து உபகச்சந்தி க்ராஹயந்தி ச

**பொருள்** – ஆத்மாவாகவே, காரணம் இப்படியாகவே அறிகிறார்கள், இப்படியே சாஸ்த்ரங்கள் கூறுகின்றன.

**விஷயம் -** கடந்த அதிகரணத்தில் ப்ரஹ்மவித்யை கூறப்பட்டது. இந்த அதிகரணத்தில் உபாஸனைப் பொருளான ப்ரஹ்மம் உபாஸகனைக் காட்டிலும் வேறுபட்ட பொருள் என்று உபாஸிக்கப்பட வேண்டுமா அல்லது உபாஸகனின் ஆத்மா என்று உபாஸிக்கப்பட வேண்டுமா என்ற சந்தேகம் ஏற்படுகிறது.

**பூர்வபக்ஷம்** - உபாஸிப்பவனைப் காட்டிலும் வேறுபட்டதாகவே ப்ரஹ்மம் உபாஸிக்கப்பட வேண்டும். இதன் காரணம், ப்ரஹ்மத்தைக் காட்டிலும் உபாஸிக்கின்ற ஜீவாத்மா வேறுபட்டவன் அல்லவா? இவ்விதம் ப்ரஹ்மம் வேறுபட்ட பொருள் என்பதைக் கீழே உள்ள வரிகளில் காணலாம்:

- ப்ரஹ்மசூத்திரம் (2-1-22) - அதிகம் து பேத நிர்தேசாத் – வேறுபட்டது.
- ப்ரஹ்மசூத்திரம் (3-4-8) - அதிகோபதேசாத் – அதிகமான உபதேசம் உள்ளதால் (ஜீவனைக் காட்டிலும் வேறுபட்டது).
- ப்ரஹ்மசூத்திரம் (1-1-14) – நேதரோநுபபத்தே:

மேலும் ப்ரஹ்மம் உபாஸிக்கப்படும்போது, உள்ளது உள்ளபடியே உபாஸிக்கப்பட வேண்டும். விபரீதமாக உபாஸிக்க நேர்ந்தால், ப்ரஹ்மத்தை அடைவது என்பது ஸித்திக்காது. இத்தகைய தத்க்ரது நியாயத்தை சாந்தோக்ய உபநிஷத் (3-14-1) - யதா க்ரதுரஸ்மிந் லோகே புருஷோ பவதி ததேத: ப்ரேத்ய பவதி – இந்த உலகில் எவ்விதம் உபாஸிக்கின்றானோ அது போன்றே அங்கும் அனுபவிக்கிறான் – என்றது காண்க. ஆக ப்ரஹ்மத்தை வேறுபட்ட பொருளாகவே எண்ணி உபாஸனை செய்யவேண்டும்.

**ஸித்தாந்தம்** - சூத்திரத்தில் உள்ள "து" என்ற சப்தம் ஏவ என்ற பொருளில் படிக்கப்பட்டது. அதாவது, உபாஸகனின் ஆத்மாவாக மட்டுமே ப்ரஹ்மம் உபாஸிக்கப்பட வேண்டும். உபாஸிப்பவனாக ஜீவாத்மா (ப்ரத்யகாத்மா) எவ்விதம் தனது சரீரத்திற்குத் தான் ஆத்மாவாக உள்ளானோ அது போன்று, பரமாத்மாவானவன் அந்த ஜீவாத்மாவின் ஆத்மாவாக உள்ளான் (அதாவது தன் சரீரத்திற்குத் தான் எவ்விதம் ஆத்மாவாக உள்ளதாக ஜீவாத்மா எண்ணுகிறானோ அது போன்றே தனது ஆத்மாவாக, தன்னைச் சரீரமாகக் கொண்டு பரமாத்மா உள்ளான் என்று எண்ண வேண்டும்). ஆகவே ப்ரஹ்மத்தை ஆத்மா என்றே உபாஸிக்க வேண்டும், ஏன்? இப்படியே உபாஸிப்பவர்கள் செய்துள்ளனர். இதனை - த்வம் வா அஹமஸி பகவோ தேவதே அஹம் வை த்வம் அஸி - பகவான் என்ற தேவதையே! நீயே நானாகிறேன், நானே நீயாகிறாய் - என்பதில் காணலாம்.

இங்கு ஒருகேள்வி எழலாம் – உபாஸிப்பவர்கள் தங்களைக் காட்டிலும் வேறுபட்டதான ப்ரஹ்மத்தை “தாங்களே அது” என்று எவ்விதம் உபாஸிக்க இயலும்? இந்த விஷயத்தில் சாஸ்த்ரங்கள் பொருத்தமாக உள்ளன. உதாரணமாகக் கீழே உள்ள பல வரிகளைச் சாஸ்த்ரங்கள் உபாஸகனைக் குறித்துக் கூறுகின்றன:

- சதபத ப்ராஹ்மணம் (14-16-7-30) - ய ஆத்மநி திஷ்டந் ஆத்மந: அந்தர: யமாத்மா ந வேத யஸ்ய ஆத்மா சரீரம் ய ஆத்மநமந்தரோ யமயதி ஸ த ஆத்மா அந்தர்யாம்யம்ருத: - யார் ஒருவன் ஆத்மாவின் உள்ளும் புறமும் வ்யாபித்துள்ளானோ, யாரை ஆத்மா அறியாமல் உள்ளதோ, யாருக்கு ஆத்மா சரீரமோ, யார் ஆத்மாவின் உள்ளே புகுந்து நியமனம் செய்கிறானோ, யார் அழிவற்றவனோ அவனே உனக்கு ஆத்மாவாக உள்ள அந்தர்யாமி.
- சாந்தோக்ய உபநிஷத் (6-8-6) – ஸந்மூலா: ஸோம்யேமா: ஸர்வா: ப்ரஜா: ஸதாயதநா: ஸத்ப்ரதிஷ்டா: ஐததாத்ம்யமிதம் ஸர்வம் – இவை அனைத்தும் ஸத் எனப்படும் ப்ரஹ்மத்திடம் உற்பத்தி ஆன பின்னர், அதனிடம் வாழ்ந்து, அதனிடமே சென்று லயித்து விடுகின்றன. இவை அனைத்துமே ஆத்மாவாகவே உள்ளன.
- சாந்தோக்ய உபநிஷத் (3-14-1) - ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம தஜ்ஜலாந் ப்ரஹ்மத்திடம் தோன்றி அதனிடமே லயித்து விடுவதாலும், அதனிடமே வாழ்வதாலும் இவை அனைத்தும் ப்ரஹ்மமே ஆகும்.

அனைத்து சேதன அசேதனங்கள் பரம்பொருளிடமிருந்து உற்பத்தி அடைவதாலும், அவனில் சென்று லயிப்பதாலும், அவனில் வாழ்வதாலும், அவனால் நியமிக்கப்படுவதாலும், அவனது சரீரமாக உள்ளதாலும், அவனே அனைத்திற்கும் ஆத்மாவாக உள்ளான்; ஆகவே அவனே உனது ஆத்மா ஆவான். ஆகவே ஜீவாத்மா எவ்விதம் தனது சரீரத்திற்குத் தான் ஆத்மாவாக உள்ளதால் “நான் தேவன், நான் மனிதன்” என்று, தன்னைச் சரீரத்துடன் ஒன்றாக எவ்விதம் எண்ணுகிறானோ, அது போன்றே ஜீவாத்மாவிற்கும் ஆத்மாவான பரமாத்மாவை ஜீவாத்மா “நான்” என்று எண்ணி உபாஸனம் செய்வது பொருத்தமே ஆகும். இதனைச் சாஸ்த்ரங்கள் தெளிவாக்குகின்றன. இப்படியாக அனைத்துவிதமான அறிவுகளும் ப்ரஹ்மத்திடமே சென்று சேர்வதால், அனைத்துச் சொற்களும் ப்ரஹ்மத்தையே குறிக்கின்றன என்று சாஸ்த்ரங்கள் மூலம் அறியப்பெறுகின்றனர். இதனால்தான் – த்வாம் வா அஹமஸ்மி பகவோ தேவதே அஹம் வை த்வம் அஸி - என்று மாற்றிக் கூறினார்கள்.

மேலும் கீழே உள்ள பல வரிகளைக் கவனிக்க வேண்டும்:

- ப்ருஹத் உபநிஷத் (1-4-10) - அத யோந்யம் தேவதாமுபாஸ்தே அந்ய: அஸாவந்ய: அஸமஸ்மீதி ந ஸ தேவதே – யார் ஒருவன் தன்னைக் காட்டிலும் வேறான தேவதையை, "நான் வேறு, அது வேறு" என்று உபாஸிக்கிறனோ அவன் ஏதும் அறியாதவன் ஆகிறான்.
- ப்ருஹத் உபநிஷத் (1-4-7) - அக்ருத்ஸ்நோ ஹி ஏஷ: ஆத்மேத்யேவோயாஸீத – இது பூர்ணமானது அல்ல (ஜீவன்), ஆகவே பூர்ணமான ஆத்மாவை உபாஸிக்க வேண்டும்.
- ப்ருஹத் உபநிஷத் (2-4-6) - ஸர்வே தம் பராதாத்யோ அந்யத்ராத்மந: ஸர்வே வேத – ஆத்மாவைக் காட்டிலும் அனைத்தையும் வேறுபடுத்திக் காண்பவனை, மற்றவை அனைத்தும் வேறுபடுத்தித் தள்ளிவிடும்.

மேலே உள்ள வரிகள் அனைத்தும், ஆத்மாவான பரமாத்மாவை உபாஸிக்காமல் இருப்பதை நிந்திப்பதாக உள்ளன. இந்த வரிகளும், ச்வேதாஸ்வதர உபநிஷத் (1-5) – ப்ருதகாத்மாநம் ப்ரேரிதம் ச மத்வா - தன்னை விட வேறுபட்டதான நியமிப்பவனை - என்று கூறும் வரியும் விரோதமான வரிகள் அல்ல (முரண்பட்ட வரிகள் அல்ல) என்று உணரவேண்டும். தன்னுடைய ஆத்மாவாக எண்ணுவதன் மூலம், வேறாக எண்ணக்கூடாது என்று கருத்து காக்கப்படுகிறது. “\தன்னுடைய சரீரத்தைக் காட்டிலும் தனது ஆத்மா வேறுபட்டது” என்று எண்ணுவது போன்று, "தன்னைக் காட்டிலும் பரமாத்மா வேறுபட்டவன்" என்ற எண்ணம் உண்டாவதும் இங்கு காக்கப்படுகிறது. ப்ரஹ்மமானது ப்ரத்யகாத்மாவான ஜீவனுக்கு ஆத்மாவாக உள்ளதாலும், ஜீவன் ப்ரஹ்மத்திற்குச் சரீரமாக உள்ளதாலும் மறுப்பு வாக்கியத்தில் (ப்ருஹத் உபநிஷத் : 1-4-7) - அக்ருத்ஸ்நோ ஹி ஏஷ: - இது பூர்ணம் அல்லவா - என்று கூறப்பட்டது. ஆகவே உபாஸகனின் ஆத்மாவாக உள்ள ப்ரஹ்மமே உபாஸனை செய்யப்படவேண்டும் என்றும், தனது ஆத்மாவாகவே எண்ணி ப்ரஹ்மத்தை உபாஸிக்க வேண்டும் என்றும் தெளிவாகக் கூறப்பட்டது.

ஆத்மத்வோபாஸநாதிகரணம் ஸம்பூர்ணம்

தென்னரங்கன் திருவடிகளே சரணம்
தென்னரங்கன் செல்வம் முற்றும் திருத்தி வைத்த இராமாநுசன்
திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீவேதாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த

# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(பகுதி – 53)

## அதிகாரம் – 16 – புருஷார்த்தகாஷ்ட்டாதிகாரம்

(பாகவத கைங்கர்யமே பகவத் கைங்கர்யம் என்னும் புருஷார்த்தத்தின் எல்லை)

ஸ்வதந்த்ர ஸ்வாமித்வாத் ஸ்வபஹுமதிபாத்ரேஷு நியதம்
ஸ்ரீய: காந்தோ தேவ: ஸ கலு விநியுங்க்தே சிதசிதௌ
யதாலோகாம்நாயம் யதிபதிமுகைராஹிததியாம்
ததோ ந: கைங்கர்யம் ததபிமத பர்யந்தம் அபவத்

**பொருள்** – இந்த உலகில் எஜமானர்கள் தங்களது பணியாட்களைத் தங்களுக்கு மட்டும் அல்லாமல், தங்கள் உறவினர்களுக்கும் பணி செய்யக் கூறுவதைக் காணலாம். அடியார்களுக்குத் தேவதைகள் தொண்டு செய்வதை வேதங்களும் கூறுகின்றன. இதே போன்று, தனது மதிப்பைப் பெற்ற பாகவதர்களுக்குத் தொண்டு செய்யும்படியாக, சேதனம் மற்றும் அசேதனங்களை, அவற்றின் எஜமானனாக உள்ளதால் பெரியபிராட்டியின் நாயகன் விதிக்கிறான். ஆகவே யதிகளின் தலைவரான எம்பெருமானார் தொடக்கமாக உள்ள ஆசார்யர்கள் மூலமாக ஞானம் பெற்ற நமக்கு, பகவத் கைங்கர்யம் என்பது, அவனுக்குப் பிரியமான பாகவத கைங்கர்யம் வரை உள்ளது என்பதை அறியவேண்டும்.

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீரங்கநாச்சியார் ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி பிள்ளை லோகாசார்யர் அருளிச் செய்த

# ஸ்ரீவசனபூஷணம்

இதற்கு ஸ்வாமி மணவாள மாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யானம்
(பகுதி – 9)

**வ்யாக்யானம்** - அநந்தரம் மஹாபாரத ப்ரதிபாத்யத்தையருளிச் செய்கிறார் (மஹாபாரதத்தால் என்று தொடங்கி). க்ருஷ்ணத்வைபாயநம் வ்யாஸம் வித்தி நாராயணம் ப்ரபும் கோஹ்யந்யோ புவி மைத்ரேய மஹாபாரத க்ருத் பவேத், ஏவம் விதம் பாரதந்து ப்ரோக்தம் யேந மஹாத்மநா ஸோயம் நாராயணஸ் ஸாக்ஷாத் வ்யாஸரூபீ மஹாமுநி: என்று பகவதாவேசாவதரமாய், ஸஹோவாச வ்யாஸ: பாராசர்ய: என்று ஆப்ததமனாக ப்ரஸித்தனாயிருந்துள்ள ஸ்ரீவேதவ்யாஸ பகவானாலே வேதாந் அத்யாபயாமாஸ மஹாபாரத பஞ்சமாத் என்கிறபடியே பஞ்சமவேதமாகப் ப்ரணீதமாய், அநேக புராண ப்ரசஸ்தமாயிருந்துள்ள மஹாபாரதமும் ஸ்ரீராமாயணத்தோபாதி ப்ரபல ப்ரமாணம். இதுவும் நடுவிற்றிருவீதிப்பிள்ளைபட்டர் தாமேயருளிச்செய்தார். பெரியபட்டரும் ஸ்ரீஸஹஸ்ரநாம பாஷ்யோபோத்காதத்திலே, ஸ்ரீராமாயணவந் மஹாபாரதம் சரணம் என்றருளிச் செய்தாரிறே. ஸர்வேச்வரனென்னாதே (தூதுபோனவன்) என்றது அவனுடைய ஆச்ரித பாரதந்த்ர்யத்தை ப்ரகாசிப்பிக்கைக்காக; தேவதேவனான தன் பெருமையையும் செய்கிற தொழிலின் தண்மையையும் பாராதே, பாண்டவர்களுக்காகக் கழுத்திலே ஓலை கட்டித் தூது போய்த்தது, ப்ரணத பாரதந்த்ர்ய ருசி பரவசனாயிறே. இதுதான் இவனுடைய ஆச்ரயண ஸௌகர்யாபாதகமான நீர்மைக்குடலாயிருந்துள்ள வாத்ஸல்யாதிகளுக்கெல்லாம் ப்ரகாசகமாயிருப்பதொன்றிறே. இந்த குணாதிக்யத்திலே ஈடுபட்டிறே "இன்னார் தூதனென நின்றான்" என்றும், "குடை மன்னரிடை நடந்த தூதா" என்றும் திருமங்கையாழ்வாரருளிச்செய்தது. அந்த திவ்ய ஸூக்தியிறே இவரிப்படியருளிச் செய்கைக்கு மூலம். பேசிற்றே பேசுகையிறே இவர்களுக்கேற்றம். தூது போனது – தண்மையாவது, கர்மவச்யதையடியாகவரிலிறே. ஐச்சமாக ஆச்ரித விஷயத்திற் செய்கிற தாழ்ச்சியெல்லாம் ஏற்றத்துக்குடலாயிறே இருப்பது. "ஸ உச்ரேயாந் பவதி ஜாயாமாந:" என்று பரார்த்தமாகப் பிறக்கையாலே நிறம்பெறுமென்று ச்ருதி சொன்னவிது பரார்த்தமாகத் தன்னிச்சையாலே செய்யுமவையெல்லாம் இவனுக்கு தேஜஸ்கரமென்னு மதுக்குபலக்ஷணமிறே. இவன் செய்த தூத்யத்தை

மாந்த்யஹேதுவாக நினைப்பார், அறிவுகேடரில் தலையானவர்களித்தனை. அறிவில் தலைநின்றவர்கள் "எத்திறம்" என்று மோஹிக்கும்படியாயிறேயிருப்பது. இப்படியிருந்துள்ள இந்நீர்மையிலேற்றத்தை வெளியி டுகைக்காகவாய்த்து இவர் (தூது போனவன்) என்றருளிச்செய்தது. மஹாபாரதமெல்லாம் இவனுடையவேற்றஞ் சொல்லுகையிலே தத்பரமாகையாலேயிறே, மஹாபாரத கதை சொல்லத் தொடங்குகின்றவன் நாராயணகதாமிமாம் என்றது. ஆக ப்ரபந்தத்வயத்துக்கும் ப்ரதாநப்ரதிபாத்யங்களின்னதென்னுமிடம் ப்ரகாசிப்பிக் கப்பட்டது.

**விளக்கம்** - அடுத்து மகாபாரதத்தில் உணர்த்தப்பட்ட பொருளை அருளிச் செய்கிறார் (முதலில் வ்யாஸரைப் பற்றிக் கூறுகிறார்). ஸ்ரீவிஷ்ணுபுராணம் (3-4-5) – க்ருஷ்ணத்வைபாயநம் வ்யாஸம் வித்தி நாராயணம் ப்ரபும் கோஹ்யந்யோ புவி மைத்ரேய மஹாபாரத க்ருத் பவேத் – மைத்ரேயரே! க்ருஷ்ண த்வைபாயனர் என்னும் பெயர் கொண்ட வ்யாஸ மஹரிஷியை அனைத்திற்கும் நாதனான ஸ்ரீமந்நாராயணன் என்றே அறிய வேண்டும். இந்த உலகில் மகாபாரதத்தை அருளிச்செய்தார் அவரன்றி வேறு யார் ஆவார் - என்றது. மேலும் - ஏவம் விதம் பாரதந்து ப்ரோக்தம் யேந மஹாத்மநா ஸோயம் நாராயணஸ் ஸாக்ஷாத் வ்யாஸரூபீ மஹாமுநி: - இப்படிப்பட்ட உயர்ந்த மகாபாரதம் எந்த ஒருவரால் அருளிச்செய்யப்பட்டதோ, அந்த மஹாத்மாவான வ்யாஸ மஹரிஷி நாராயணனே ஆவார் - என்றும் கூறப்பட்டது. ஆக எம்பெருமான் அவதாரமாகவே வ்யாஸர் உள்ளார். மேலும் - ஸஹோவாச வ்யாஸ: பாராசர்ய: – பராசர மஹரிஷியின் புத்திரரான வ்யாஸர் உரைத்தார் - என்று கூறும்படி அனைவரிலும் உயர்ந்தவராகவும், அனைவராலும் அறியப்பட்டவராகவும் திகழும் வ்யாஸ பகவானால், வேதாந் அத்யாபயாமாஸ மஹாபாரத பஞ்சமாத் - மஹாபாரதத்துடன் கூடிய ஐந்தாகிய வேதங்கள் ஏற்படுத்தினார் - என்னும்படி ஐந்தாம் வேதமாகச் செய்யப்பட்டது மகாபாரதம் ஆகும். இதனையும் நடுவில்திருவீதிப்பிள்ளை அருளிச்செய்தார். பெரியபட்டரான ஸ்வாமி பராசரபட்டரும் தனது ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாம அறிமுக உரையில் – ஸ்ரீராமாயணவந் மஹாபாரதம் சரணம் - ஸ்ரீராமாயணம் போன்று மகாபாரதமும் உயர்ந்த ப்ராமாணம் – என்றது காண்க.

எம்பெருமானை ஸர்வேச்வரன் என்று கூறாமல், "தூது போனவன்" என்று ஏன் கூறினார்? அடியார்களுக்கு அடிமையாக நிற்கின்ற அவனது குணத்தை வெளிப்படுத்தவே ஆகும் தேவர்களுக்கும் தலைவனாகிய அவன் தனது மேன்மையை ஆராயாமல், தான் செய்கின்ற செயலின் தாழ்வையும் பாராமல், பாண்டவர்களுக்காகத் தாழ்ந்த பொருள் போன்று ஓலையைக் கட்டிக் கொண்டு தூதுவனாகச் சென்றான். இது ஏன்? அடியார்களுக்கு அடிமையாக நின்று தொண்டு புரிவதில் உள்ள ருசியை அவன் அறிந்திருந்தாலேயே ஆகும்.

அவனை யாரும் எளிதாக அடையலாம் என்பதை உணர்த்தும் அவனது குணங்களான வாத்ஸல்யம் (பசு கன்றிடம் காட்டும் பாசம், குற்றங்களையும் குணமாகக் கொள்ளும் தன்மை) முதலானவற்றை விளக்கும் குணமாக இந்த "அடியார்களின் அடிமை" என்பது உள்ளது. இந்தக் குணத்தில் மயங்கிய காரணத்தால் அல்லவா திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில் (2-2-3) - இன்னார் தூதன் என நின்றான் – என்றும், (6-2-9) - குடை மன்னரிடை நடந்த தூதா - என்றும் அருளிச்செய்தார்? அத்தகைய பெரியதிருமொழியே இங்கு ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் இவ்விதம் அருளிச்செய்ததற்கு மூலமாக உள்ளது? பூர்வர்கள் கூறுவதை மீண்டும் உணர்த்துவது அல்லவோ இவர் போன்றவர்களுக்குப் பெருமை?

தூது போதல் என்பது தாழ்வான செயல் அல்லவோ என்ற கேள்வி எழலாம். ஆனால் அத்தகைய செயலானது கர்மத்தின் அடிப்படையில் உண்டானால் மட்டுமே தாழ்வானது ஆகும். ஆனால் அடியார்களுக்காகத் தனது ஆசைப்படிச் செய்யும் அனைத்தும் தாழ்வான செயல்களாக இருந்தாலும், அவை ஏற்றமாகவே கொள்ளப்படுகின்றன. யஜுர் அஷ்டகம் - ஸ உச்ரேயாந் பவதி ஜாயாமாந: – பரமாத்மா இந்த உலகில் பிறக்கும்போது மிகுந்த ஒளியை அடைகிறான் - என்றது காண்க. ஆக மற்றவர்களுக்காகப் பிறந்து, அவர்களுக்காகச் செயல்கள் புரியும்போது இவன் தனது ஒளியை அடைகிறான் என்று வேதத்தால் முழங்கப்பட்ட இந்தக் கருத்தானது, மற்றவர்களுக்காகத் தனது விருப்பத்தின் அடிப்படையில் செய்கின்ற செயல்கள் அனைத்தும் இவனுக்கு ஒளியை அளிப்பவை என்பது உணர்த்தவே ஆகிறது.

இவன் தூது போன செயலானது தாழ்வான ஒன்று என எண்ணுபவர்கள், அறிவிழந்த மனிதர்களில் தலை சிறந்து விளங்குபவர்கள் ஆவர். மிகுந்த அறிவுள்ளவர்கள் இந்தச் செயலைக் கண்டு, திருவாய்மொழி (1-3-1) – எத்திறம் - என்று மயங்கும்படியாக அல்லவோ இந்தச் செயல் உள்ளது? இப்படியாக உள்ள இந்தச் செயல் மூலம் இவனது எளிமையை வெளிப்படுத்தவே, அந்த எளிமையின் மேன்மையை வெளிப்படுத்தவே இவர் "தூது போனவன் ஏற்றம்" என்று அருளிச்செய்தார்.

மகாபாரதம் முழுமையும் எம்பெருமானின் மேன்மையைக் கூறுவதால், இதனைத் தொடங்கும்போது வ்யாஸரின் சிஷ்யரான வைசம்பாயனர், மகாபாரதம் ஆதிபர்வத்தில் – நாராயணகதாமிமாம் - நாராயணனின் இந்தக் கதையை நான் கூறப் போகிறேன் - என்று கூறினார். எனவே இராமாயணத்திலும்,

மகாபாரதத்திலும் கூறப்பட்ட முக்கியமான பொருள் "இன்னது" என்று தெளிவாக விளக்கப்பட்டது.

6. இவையிரண்டாலும் புருஷகார வைபவமும் உபாய வைபவமும் சொல்லிற்றாய்த்து.

**அவதாரிகை** – உபப்ர்ம்ஹணமுகேந வேதாந்த தாத்பர்யத்தை நிஷ்கர்ஷித்து உஜ்ஜீவநத் துக்குடலானவற்றைச் சொல்லுவதாகவிறே உபக்ரமித்தது. அதிலிப்போது சொன்னவி வற்றால் வேதாந்தத்திலெவ்வர்த்தங்கள் சொல்லிற்றாய்த்தென்னுமா காங்க்ஷையிலே யருளிச் செய்கிறார் - மேல் இவை - என்று தொடங்கி.

**விளக்கம்** - வேதங்களின் ஆழ்பொருளை விரிவாக உரைக்கின்ற நூல்கள் மூலம், வேதாந்தங்களின் ஆழ்பொருளை நிச்சயம் செய்து கொண்டு, அதன் மூலம் உயிர்கள் கரையேறும் வழியை உரைப்பது என்பதை முடிவு செய்து இவர் தொடங்கினார். ஆகவே, இப்போது கூறப்பட்டதன் மூலம் வேதாந்தங்களின் எந்த ஆழ்பொருள்கள் உரைக்கப்பட்டன என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது (சிறையிருந்தவளேற்றம், தூதுபோனவனேற்றம்) என்றவிவை யிரண்டாலும், அபராத பூயிஷ்டரான சேதநர்க்கு ஆச்ரயணீயையாமளவில் அகில ஜகந்மாதாவான ஸம்பந்தத்தாலும் க்ருபாதிகளாலும் நடுவொரு புருஷகாரம் வேண்டாதபடி வந்து ஆச்ரயிக்கலாம்படியாய், அபராதங்களைப் பார்த்துச் சீறி "க்ஷிபாமி", "நக்ஷமாமி" என்னுமீச்வர ஹ்ருதயத்தைத் திருத்தி அவர்களையங்கீகரிப்பிக்கும் புருஷகாரபூதையானவள் வைபவமும், அங்கீகரித்தால் பின்னையவள்தானே சிதகுரைக்கிலும் "என்னடியாரது செய்யார்" என்று மருதலித்துத் தான் திண்ணியனாய் நின்று ரக்ஷிக்கும் உபாயபூதனானவன் வைபவமும் சொல்லிற்றாய்த்தென்கை. (புருஷகாரம்) என்றும், (உபாயம்) என்றும் இவற்றை நிரூபகமாகவருளிச்செய்தது, பிராட்டிக்கு புருஷகாரத்வமும் ஈச்வரனுக்கு உபாயத்வமும் அஸாதாரணமென்று தோற்றுகைக்காக. இது தன்னை "மத் ப்ராப்திம் ப்ரதி ஜந்தூநாம் ஸம்ஸாரே பததாமத: லக்ஷ்மீ: புருஷகாரத்வே நிர்திஷ்டா பரமர்ஷிபி; மமாபிச மதம்ஹ்யேதத் நாந்யதா லக்ஷணம் பவேத்" என்றும், "அஹம் மத்ப்ராப்த்யுபாயோவை ஸாக்ஷாத் லக்ஷ்மீபதிஸ் ஸ்வயம், லக்ஷ்மீ: புருஷகாரேண வல்லபா ப்ராப்தி யோகிநீ, ஏஹஸ்யாச்ச விசேஷோயம் நிகமாந்தேஷு சப்த்யதே" என்றும், "அகிஞ்சந்யைக சரணா: கேசித் பாக்யாதிகா: புந:, மத்பதாம்போருஹத்வந்த்வம் ப்ரபத்ய ப்ரீத மாநஸா:, லக்ஷ்மீம் புருஷகாரேண வ்ருதவந்தோ வராநந, மத்க்ஷமாம் ப்ராப்ய ஸேநேச ப்ராப்யம் ப்ராபகமேவ மாம், லப்த்வா க்ருதர்த்தா: ப்ராப்ஸ்யந்தே மாமே வாநந்ய மாநஸா:"

என்று பகவச்சாஸ்த்ரத்திலே தானே யருளிச் செய்தானிறே. மற்றைப் பிராட்டிமார்க்கும் ஸூரிகள் முதலான ததீயர்க்கும் இவள் ஸம்பந்தமடியாக வருகிற புருஷகாரத்வமிறேயுள்ளது; இவளைப் போலே ஸ்வதஸ்ஸித்தமன்றே. ஆகையிறே, "ஏதத் ஸாபேக்ஷஸம்பந்தா தந்யேஷா மமலாத்மநாம், தேவீஸூரி குரூணாஞ்ச கடகத்வம் நது ஸ்வத:" என்று தீபஸங்க்ரத்திலே ஜீயரருளிச்செய்தது. உபாயத்வமும் "க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்" என்று ஸநாதந தர்மமாகச் சொல்லப்படுகிற அவனுக்கே ஸ்வதஸ்ஸித்தமாய் ததீயர்க்கு ததாஸத்தியடியாக வருகிறதிறேயுள்ளது. ஆகையாலே பிராட்டிக்கு புருஷகாரத்வமும், ஈச்வரனுக்கு உபாயத்வமும் நிரூபகமாகத் தட்டில்லை. இவ்வர்த்தத்தை வெளியிடுகைக்காகவாய்த்து இவரிப்படியருளிச்செய்தது. இப்படி உபப்ரும்ஹணமான ப்ரபந்த த்வயத்தாலும் ப்ரதிபாதிக்கப்படுகிற புருஷாகாரத்வமுமுபாயத்வமும் உபப்ரும்ஹ்யமான வேதாந்தத்தி லுக்தமான ஸ்தலமேதென்னில், கடவல்ல்யுபநிஷத் ஸித்தமான த்வயத்தில் பூர்வவாக்யத்திலே உபயமும் சேர உக்தமிறே. இச்சேதநனுக்கு இருவரோடும் ஸம்பந்தமுண்டாயிருக்க ஈச்வர ஸமாச்ரயணத்துக்கிவள் புருஷகாரமாக வேண்டுகிற தென்னென்னில், மாத்ருத்வ ப்ரயுக்தமான வாத்ஸல்யாதிரேகத்தாலும், அவனைப்போலே காடிந்யமார்தவங்கள் கலந்திருக்கையன்றிக்கே, கேவல மார்தவமேயாய், பிறர் கண்குழிவு காணமாட்டாத ப்ரக்ருதியாகையாலும், விமுகரையுமபிகுகராக்குகைக்கு க்ருஷி பண்ணு மவளாகையாலும், குற்றவாளர்க்குங் கூசாமல் வந்து காலிலே விழலாம்படியிருப்பாளாய், பும்ஸ்த்வ ப்ரயுக்தமான காடிந்யத்தோடே பித்ருத்வ ப்ரயுக்தமான ஹிதபரதையையு முடையனாய், குற்றங்களைப் பத்தும் பத்தாகக் கணக்கிட்டு க்ரூரதண்டங்களைப் பண்ணுகையாலே, குற்றவாளர்க்கு முன்செல்லக் குடல்கரிக்கும்படியிருக்குமீச்வரனை உசிதோபாயங்களாலே குற்றங்களையடைய மறப்பித்துக் கூட்டிவிடுமவளுமா யிருக்கையாலே அபராதமே வடிவான இச்சேதநன் அவனையாச்ரயிருகுமளவில் இவள் புருஷகாரமாக வேணும். ஆகையிறே அவனை உபாயாமாகவரிக்க இழிகிறவளவில் இவளைப் புருஷகாரமாக முன்னிடுகிறது.

**விளக்கம்** - "இவை இரண்டும்" என்பதன் மூலம் சிறை இருந்தவள் ஏற்றம், தூது போனவன் ஏற்றம் ஆகிய இரண்டையும் குறிக்கிறார். பாவங்கள் பலவும் செய்த சேதனர்கள் வந்து அடையத்தக்கவளாக பிராட்டி உள்ளாள். இப்படியாக அவளிடம் சென்றடைய ஏதேனும் புருஷகாரம் (சிபாரிசு) வேண்டுமோ என்றால் – அனைத்திற்கும் தாய் என்பதாலும், தயை முதலான குணங்களாலும் அது போன்ற புருஷகாரம் ஏதும் அவசியம் இல்லாமல், ஏற்றுக் கொள்பவளாகப் பிராட்டி உள்ளாள். சேதனர்கள் செய்யும் பாவமான செயல்களைக் கண்டு கோபம் கொள்ளும் எம்பெருமான், கீதை (16-19) – க்ஷீபாமி – அசுர பிறவிகளில் அவர்களைத் தள்ளுகிறேன் - என்றும், வராஹபுராணம் - ந க்ஷமாமி - என் அடியார்களை நிந்திப்பவர்களை நான் பொறுப்பதில்லை - என்றும் கூறுகிறான்.

அவனது இந்தக் கோபம் கொள்ளும் மனதை மாற்றி, அவர்களை ஏற்றுக் கொள்ளச் செய்யும் பிராட்டியின் பெருமைகள் புருஷகாரவைபவம் என்பதன் மூலம் கூறப்பட்டது. இவ்விதம் எம்பெருமான் ஏற்றுக் கொண்ட பின்னர், அந்தப் பிராட்டி தானே அவர்கள் மீது ஏதேனும் குற்றம் சுமத்தினாலும் அதற்கு எம்பெருமான் பெரியாழ்வார் திருமொழி (4-9-2) - என் அடியார் அது செய்யார் - என்பதற்கு ஏற்ப, அவள் கூறுவதை மறுத்து, அவர்களைக் காப்பாற்றுவதில் உறுதியாக நிற்கிறான். இப்படியாக உள்ள அவன் பெருமைகளை உபாய வைபவம் என்பதன் மூலம் அருளிச்செய்தார்.

புருஷகாரம் என்றும், உபாயம் என்றும் இவர்களை மற்றவற்றில் இருந்து வேறுபடுத்தி அருளிச்செய்தது ஏன் என்றால் – புருஷகாரம் என்பது பிராட்டிக்கும், உபாயம் என்பது எம்பெருமானுக்கும் இயல்பாகவே உள்ளது என்பதை உணர்த்தவே ஆகும். இந்த விஷயத்தைக் கீழே உள்ள வரிகளில் அறியலாம்:

- மத் ப்ராப்திம் ப்ரதி ஜந்நூநாம் ஸம்ஸாரே பததாமத: லக்ஷ்மீ: புருஷகாரத்வே நிர்திஷ்டா பரமர்க்ஷிபி; மமாபிச மதம்ஹ்யேதத் நாந்யதா லக்ஷணம் பவேத் – ஸம்ஸாரம் என்ற படுகுழியில் விழுந்து கிடக்கும் இந்த மக்களுக்கு, என்னை அடையும் புருஷகாரமாக பிராட்டி உள்ளாள் என்பது மஹரிஷிகளால் கூறப்பட்டது. இப்படி இவள் புருஷகாரமாக உள்ளாள் என்பது என்னாலும் ஏற்கப்படும் பிராட்டி இலக்கணம் ஆகும். இதற்கு மறுகருத்து இல்லை.

- அஹம் மத்ப்ராப்த்யுபாயோவை ஸாஷாத் லக்ஷ்மீபதிஸ் ஸ்வயம், லக்ஷ்மீ: புருஷகாரேண வல்லபா ப்ராப்தி யோகிநீ, ஏஹஸ்யாச்ச விசேஷோயம் நிகமாந்தேஷு சப்த்யதே – மஹாலக்ஷ்மியின் நாயகனான நான் நேர் உபாயமாக உள்ளேன். என்னை எப்போதும் வசீகரிக்கும் மஹாலக்ஷ்மி, புருஷகாரத் தன்மை மூலம் உயிர்களை என்னிடம் அடையச்செய்தல் என்னும் தொடர்பைக் கொண்டுள்ளாள். எங்கள் இருவருக்கும் உள்ள இந்தத் தன்மைகள் வேதாந்தங்களில் விவரிக்கப்பட்டுள்ளன.

- அகிஞ்சந்யைக சரணா: கேசித் பாக்யாதிகா: புந:, மத்பதாம்போருஹத்வந்த்வம் ப்ரபத்ய ப்ரீத மானஸா:, லக்ஷ்மீம் புருஷகாரேண வ்ருதவந்தோ வராநந, மத்க்ஷமாம் ப்ராப்ய ஸேநேச ப்ராப்யம் ப்ராபகமேவ மாம், லப்த்வா க்ருதர்த்தா: ப்ராப்ஸ்யந்தே மாமே வாநந்ய மாநஸா: - சிறந்த விஷ்வக்ஸேனரே! மற்ற எந்த ஓர் உபாயத்தையும் பற்றாமல், என்னை மட்டுமே உபாயம் என்று ஒரு சில புண்ணிய ஆத்மாக்கள் பற்றியுள்ளனர். எனது தாமரை மலர் போன்ற திருவடிகளைப்

பற்றிய அவர்கள் – பெறப்போகும் மோக்ஷம் என்ற பேற்றில் ஆர்வம் கொண்டு, பெரியபிராட்டியைத் தங்கள் உபாயமாகக் கைக்கொண்டு, என்னை அவர்களது தவறுகளைப் பொறுத்துக் கொள்ளும்படியாகச் செய்து விடுகின்றனர். அடையப்படும் பொருளாக (உபேயம்) உள்ள என்னைப் பற்றியபடி, என்னையே உபாயமாகவும் பற்றுகின்றனர். இப்படியாகத் தாங்கள் செய்யவேண்டிய செயல்களைச் செய்து முடித்தவர்களாக, வேறு எதிலும் தங்கள் மனதைத் திருப்பாதவர்களாக இருந்து, என்னையே அடைகின்றனர்.

மற்ற பிராட்டிகளுக்கும் நித்யசூரிகளுக்கும் இந்தப் புருஷகாரத்தன்மை உள்ளபோதிலும், அந்தத் தன்மை அவர்களுக்கு இவளுடன் அவர்கள் கொண்டுள்ள தொடர்பு காரணமாக மட்டுமே உண்டாகிறது. புருஷகாரத்வம் என்பது அவர்களுக்கு இவளைப் போன்று இயல்பாகவே அமைந்தது அல்ல. இதனைக் கருத்தில் கொண்டு வாதிகேஸரி அழகிய மணவாள ஜீயர் தனது தத்வதீப ஸங்கரஹத்தில் – ஏதத் ஸாபேக்ஷஸம்பந்தா தந்யேஷா மமலாத்மநாம், தேவீஸூரி குரூணாஞ்ச கடகத்வம் நது ஸ்வத: - பெரியபிராட்டியின் தொடர்பு காரணமாக மட்டுமே மற்ற பிராட்டிகளுக்கும், நித்யஸூரிகளுக்கும், ஆசார்யர்களுக்கும் புருஷகாரத்தன்மை உள்ளது; அது அவர்களுக்கு இயல்பாக உள்ளது அன்று – என அருளிச்செய்தார்.

உபாயத்தன்மை என்பது, மகாபாரதம் ஆரண்ய பர்வம் (88-253) – க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம் – க்ருஷ்ணனையே என்றும் உள்ள தர்மம் என்று கூறுகின்றனர் – என்பதற்கு ஏற்ப ஸர்வேஸ்வரனுக்கு மட்டுமே இயல்பாக அமைந்துள்ளது. மற்றவர்களுக்கு அவனது தொடர்பால் மட்டுமே உண்டாகிறது. ஆகவே, பிராட்டிக்குப் புருஷார்த்த தன்மையும், எம்பெருமானுக்கு உபாயத்தன்மையும் தனித்தன்மையாக உள்ளது என்பதைக் கூறுவதில் எந்த ஆக்ஷேபமும் இல்லை. இதனை வெளிப்படுத்தவே இவர் இவ்விதம் அருளிச் செய்தார்.

வேதங்களின் ஆழ்பொருளை விவரித்துக் கூறும் இராமாயணத்திலும், மகாபாரதத்திலும் கூறப்பட்ட உபாயவைபவமும், புருஷகாரவைபவமும் இந்த இரண்டு நூல்கள் மூலம் விவரிக்கப்படும் வேதங்களில் எங்கு கூறப்பட்டுள்ளன? கடவல்லீ உபநிஷத்தில் கூறப்படுகின்ற த்வயம் என்ற மந்திரத்தின் முன் வரியில் இந்த இரண்டும் ஒன்றாகவே கூறப்படுகின்றன.

உலகில் உள்ள மக்களுக்கு இந்த இருவருடன் (எம்பெருமான், பிராட்டி) உள்ள தொடர்பு இயற்கையாகவே உள்ளபோது, எம்பெருமானை அடைவதற்குப் பிராட்டியின் புருஷகாரம் ஏன் அவசியமாகிறது என்று கேள்விக்கு அடுத்து விடை

அருளிச் செய்கிறார். தாய் என்னும் தன்மையால் அவளுக்கு வாத்ஸல்யம் இயல்பாகவே உள்ளது. எம்பெருமானைப் போன்று இவளிடம் மென்மையும் கடுமையும் கலந்து இருப்பதில்லை. இவளிடம் மென்மை மட்டுமே உள்ளது. ஆகவே இவள் மற்றவர்களிடம் உள்ள தாழ்வுகளைக் காண்பதில்லை. தீய மனம் கொண்டவர்களையும் திருத்தி, நல்ல மனம் கொண்டவர்களாக ஆக்கிவிடும் தன்மை உடையவளாக பிராட்டி உள்ளாள். எம்பெருமான் ஆண்மை காரணமாகக் கடுமையாக உள்ளபோதிலும், தந்தைக்கு ஏற்ற தன்மையுடன் நன்மையையே செய்பவனாக உள்ளான். அடியார்கள் செய்கின்ற குற்றங்களைப் பத்து பத்தாகக் கூறு போட்டுக் கணக்கில் வைத்துக் கொள்ளும் தன்மை கொண்டவனாக எம்பெருமான் உள்ளான். இதனால் தவறு செய்தவர்கள், அவனிடம் செல்வதற்கு தங்கள் குடல் கலக்கும்படி நடுங்குகின்றனர். அப்படிப்பட்ட ஸர்வேச்வரன் இவர்களது தவறுகளை மறக்கும்படியாக பிராட்டி செய்துவிடுகிறாள். மேலும், அவன் திருவடிகளில் கொண்டு சேர்த்து விடுபவளாகப் பிராட்டி உள்ளாள். ஆகவே இந்தக் காரணங்களால் பாவம் பல செய்தபடி உள்ளவர்கள் ஸர்வேச்வரனைப் பற்றுவதற்கு இவள் புருஷகாரமாக இருந்தே ஆகவேண்டும். இந்தக் காரணங்களால் அல்லவோ, அவனை உபாயமாகப் பற்றுவதற்கு, இவளைப் புருஷகாரமாகப் பற்ற வேண்டும் என்று இவளை முன் நிறுத்துகிறோம்.

ஸ்வாமி பிள்ளை லோகாசார்யர் திருவடிகளே சரணம்
ஸ்வாமி மணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம்

.......தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

# திருவாய்மொழி

## இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம் மூலமும், எளிய தமிழ்நடையும்

(பகுதி – 18)

1.1.2 மனனகமலமற மலர் மிசையெழுதரும்
மனனுணர்வளவிலன் பொறியுணர் வவையிலன்
உனனுணர்முழுநல மெதிர் நிகழ்கழிவினும்
இனனிலனெனனுயிர் மிகுநரையிலனே.

**பொருள்** - யோகாப்யாஸம் முதலானவற்றால் மனதில் உள்ள அவித்யை, காமம் மற்றும் க்ரோதங்கள் கழிந்த பின்னர், மலர்ந்து எழுகின்ற, மனதின் யோக ஞானத்தால் அறியப்படும் ஆத்மாவின் தன்மையைக் கொண்டவன் அல்லன்; இந்திரியங்களால் அறியப்படுகின்ற பொருள்களின் தன்மையை உடையவன் அல்லன்; ஞானம் மற்றும் ஆனந்தமயமாக உள்ளவன்; எதிர்காலம், நிகழ்காலம், கடந்தகாலம் ஆகிய முக் காலங்களிலும் தன்னைப் போன்ற ஒருவரையோ அல்லது தன்னைவிட உயர்ந்தவரையோ கொண்டிருக்காதவன் - இப்படிப்பட்ட அவனே நான் உயிர் வாழ்வதற்குக் காரணமாக உள்ளவன் ஆவான்.

**அவதாரிகை –** யதோ வா இமாநி இத்யாதி ச்ருதி ப்ரக்ரியையாலே கார்யாகாரமான ஜகத்தைப் பிடித்து ஜகத்காரணவஸ்து உபாஸ்யமென்னுதல், அன்றிக்கே, ஸ்வரூபத்தை முற்படச் சொல்லிப் பின்னை விபூதியிலே போருதல் செய்யாதே முற்பட குணங்களிலே இழிவானென்னென்னில்; ஸர்வேச்வரன் தம்மை வசீகரித்தது குணங்களைக் காட்டியாகையாலே தாம் அகப்பட்ட துறையிலே முற்பட இழிந்து பேசினார். அக்குணங்கள்தான் ஸ்வரூபத்தைப் பற்றியல்லதிராமையாலே அவற்றுக்கு ஆச்ரயமான ஸ்வரூபத்தை "அவன்" என்று ப்ரஸங்கித்தார் முதற்பாட்டில்; அங்கு ப்ரஸ்துதமான திவ்யாத்மஸ்வரூபம் ஹேய

ப்ரத்யநீகதையாலும் கல்யாண குணகதாநதையாலும் சேதநாசேதந விலக்ஷணமாயிருக்குமென்று அந்த ஸ்வரூபத்தை அநுபவிக்கிறார் இப்பாட்டில்.

**விளக்கம்** – தைத்திரீய ப்ருகுவல்லீ - யதோ வா இமாநி – யார் ஒருவனிடம் இருந்து இவை அனைத்தும் உண்டானதோ அவனே பரம்பொருள் - என்று உபநிஷத் கூறியபடி, காரிய வடிவில் உள்ள உலகத்தை முதலில் கூறி, அதற்குக் காரணமான எம்பெருமானே த்யானிக்கத் தக்கவன் என்று கூறுவது ஒருவிதம் ஆகும். அல்லது எம்பெருமானின் ஸ்வரூபத்தை முதலில் கூறி, அதன் பின்னர் அவனால் படைக்கப்பட்ட அனைத்தையும் கூறுதல் இரண்டாவது விதமாகும். இந்த இரண்டு வழிகளிலும் ஈடுபடாமல் முதலில் குணங்களைப் பற்றி ஆழ்வார் ஏன் கூற வேண்டும்? ஸர்வேச்வரன் தன்னை வசப்படுத்தியது குணங்களைக் காண வைத்தே ஆகும். ஆகையால், தான் அகப்பட்ட அவற்றை முதலில் கூறுகிறார். அந்தக் குணங்கள் அவனது ஸ்வரூபம் இல்லாமல் இருக்க முடியாது என்பதால், அவை அண்டும் இடமாகிய ஸ்வரூபத்தை “அவன்” என்று முதல் பாசுரத்தில் அருளிச்செய்தார். அங்கு கூறப்பட்ட எம்பெருமானின் ஸ்வரூபம் தோஷங்களுக்கு எதிர்த்தட்டாகவும், கல்யாண குணங்களுக்கு இருப்பிடமாகவும், சேதனம் மற்றும் அசேதனங்களை விட வேறுபட்டதாகவும் உள்ளதால் அந்த ஸ்வரூபத்தை இந்தப் பாசுரத்தில் அனுபவிக்கிறார்.

**வ்யாக்யானம்** - (மனனகமித்யாதி) ஜீவாத்ம ஸ்வரூபத்தில் பகவத் ஸ்வரூபம் விலக்ஷணம் என்கிறார். ஆனால் “மனனகம்” என்று தொடங்கிச் சொல்லுகிற இதுக்குக் கருத்து என்னென்னில்; ஸ்வரூப வைலக்ஷண்யத்தை அநுபவிக்கிற இவருடைய ப்ரதிபத்தி க்ரமமிருக்கிறபடி. மனனென்றது – மனமென்றபடி. (அகம்) நிரவயவமாய் இருக்கிற மநஸ்ஸுக்கு ஒருள்ளும் புறம்புமில்லாமையாலே மனனகமென்றது – மநஸ்ஸிலே என்றபடி. அன்றியே, பராகர்த்த விஷயமாயும், ப்ரத்யகர்த்த விஷயமாயும் போருகையாலே பராகர்த்தத்தைத் தவிர்ந்து, ப்ரத்யகர்த்த விஷயமானத்தை அகமென்கிறதாகவுமாம்.

**விளக்கம்** - (மனனகம்) - ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தை விட எம்பெருமானின் ஸ்வரூபம் வேறுபட்ட மேன்மை உடையது என்கிறார். ஆனாலும் ஜீவ ஸ்வரூபத்தை மனன்அகம், மலம்அற என்று பலவிதமான அடைமொழியுடன் வர்ணிக்க வேண்டுமா என்றால் – எம்பெருமாளின் ஸ்வரூபத்தை அதன் வேறுபட்ட தன்மையுடன் உணர்ந்து அனுபவிக்கும்படி இவருடைய அனுபவ முறை உள்ளது. மனன் என்றால் மனம் என்பதாகும். (அகம்) - உறுப்புகள் இல்லாமல் உள்ள மனதிற்கு உள்ளும் புறமும் இல்லாததால் மனனகம் – மனதிலே என்றார். அல்லது, மனம் வெளிப்பொருளிலும் உட்பொருளிலும் செல்லும் தன்மை உடையது;

இவற்றில் வெளிப்பொருளில் சொல்லாது உட்பொருளில் மட்டுமே செல்லும் மனம் என்பதை உணர்த்தும் வகையில் அகம் என்றார்.

வ்யாக்யானம் – (மலமற) மனனகத்திலுண்டான மலமுண்டு - அவித்யாதிகள்; அவையற. அவையாவன காம: க்ரோதச்ச லோபச்ச ஹர்ஷமாநமதா குணா: விஷாதச்சாஷ்டம: ப்ரோக்த இத்யேதே மநஸோ மலா: ஆத்மஸ்வரூபமும் நித்யமாய், ஜ்ஞாநமும் நித்யமாகையாலே இத்தோஷம் ஸ்வரூபகதமுமல்ல ஜ்ஞாநகதமுமல்ல; ஆத்மாவினுடைய தர்மபூதஜ்ஞாநத்துக்கு உதயாஸ்தமயவ்யவஹாரம் பண்ணுகிறது, ஜ்ஞாந ப்ரஸ்ருதி த்வாரத்தைப் பற்றவாயிற்று; ஆக ஜ்ஞாந ப்ரஸ்ருதி த்வாரமான மநஸ்ஸைப் பற்றிக் கிடக்கிற தோஷமானது, யோகசாஸ்த்ரத்தில் சொல்லுகிற க்ரமத்திலே பாஹ்யவிஷய ப்ரவணமான நெஞ்சை ப்ரத்யக் விஷயமாக்கி யமநியமாதி க்ரமத்தாலே அநுஸந்திக்கப் புக்கவாறே கழியக்கடவது.

**விளக்கம் -** மனதில் தோஷங்கள் உண்டு. இவை அவித்யை முதலானவை ஆகும் (அவித்யாதி என்று ஆதிசப்தத்தால் கர்ம வாசனை ருசிகள் கூறப்படுகின்றன). அவை நீங்கும்படியாக. ஆத்மா அழியாதது; ஞானம் நித்யமானது; ஆகவே இந்தத் தோஷங்கள் ஆத்மாவையும் சேர்ந்தது அல்ல, ஞானத்தையும் சேர்ந்த்து அல்ல. ஆத்மாவின் தர்மபூத ஞானத்திற்கு தோற்றமும் மறைவும் உண்டாவது என்பது ஞானம் பரவுவதற்கு வழியாக உள்ள மனதால் ஆகும் (தர்மபூத ஞானம் என்றால் ”நான் காண்கிறேன், நான் நடக்கிறேன்” என்ற அறிவு. அதாவது ஆத்மா தன்னைத்தானே அறிகின்ற ஞானம் எனலாம்). ஆக ஞானம் ஏற்படுவதற்கு வழியாக உள்ள மனதைத் தோஷங்கள் பீடித்தபடி உள்ளன. இந்த தோஷங்கள் உலக விஷயங்களில் ஈடுபடவல்ல மனதை, யோக சாஸ்திரங்களில் கூறும்படி உட்பொருளை நோக்கும்படியாகச் செய்ய வேண்டும்; யமம் மற்றும் நியமம் ஆகியவற்றைக் கைக்கொண்டவுடன் அந்த தோஷங்கள் அழிந்துவிடும் (யமம், நியமம், ஆசநம், ப்ராணாயாம், ப்ரத்யாகாரம், தாரணை, த்யானம், சமாதி போன்றவை யோகத்தின் எட்டு அங்கங்களாகும்).

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச் செய்த

# திருமாலை

(பகுதி – 42)

27. குரங்குகள் மலையை நூக்கக் குளித்துத்தாம் புரண்டிட்டு ஓடித்
தரங்கநீர் அடைக்கல் உற்ற சலம் இலா அணிலும் போலேன்
மரங்கள் போல் வலிய நெஞ்சம் வஞ்சனேன் நெஞ்சு தன்னால்
அரங்கனார்க்கு ஆட்செய்யாதே அளியத்தேன் அயர்க்கின்றேனே.

**பொருள் –** வானரங்கள் பாலம் கட்டும் பொருட்டு மலைகளைத் தள்ளிக்கொண்டு வந்தன. அப்போது அங்கு இருந்த அணில்கள் கடல் நீரிலே மூழ்கி, அங்கு கரையில் இருந்த மண்ணில் புறண்டு, அலைகளுடன் பொங்கும் கடலை அடைப்பதில் ஈடுபட்டு இருந்தன. இப்படிப்பட்ட களங்கம் இல்லாத அணில்கள் போன்றும் நான் இல்லை. மரங்கள் போன்று எனது மனம் கடினமாகவே உள்ளது. எனது ஸ்வரூபத்திற்கு விரோதமான செயல்களிலேயே நான் ஈடுபட்டுள்ளேன். ஸ்ரீரங்கநாதனுக்கு உண்டான அனைத்து விதமான கைங்கர்யமும் செய்யும் தகுதியை நான் பெற்றுள்ளபோதிலும், அவனுக்கு அத்தகைய கைங்கர்யம் ஏதும் செய்யாமல் உள்ளேன்.

**அவதாரிகை –** மநுஷ்யாதிகாரமானவை ஒன்றுமில்லையாகில், திருவடி, திருவனந் தாழ்வான் முதலானவர்களால் கொள்ளும் அடிமையை, சாஸ்த்ர வச்யதையுமின்றிக்கே இருந்துள்ள திர்யக்குகளைக் கொள்ளுவதாக நாம் வந்து அவதரித்த காலத்தில், திர்யக் ஸாமாந்யத்தாலே அணில்கள் சுத்தபாவனையோடே பண்ணின சில கிஞ்சித்காரமுண்டு; அதுதானுண்டோவென்னில்; அதுவுமில்லை என்கிறார்.

**விளக்கம்** – பெரியபெருமாள் ஆழ்வாரிடம், "மனிதர்களால் செய்யக்கூடிய நல்ல செயல்கள் ஏதும் உம்மிடம் இல்லை என்கிறீர். போகட்டும். பரமபதத்தில் நான் உள்ளபோது எனக்கு கருடன், விஷ்வக்ஸேநர் முதலானவர்கள் செய்கின்ற கைங்கர்யங்களை இந்த உலகில் உள்ள விலங்குகளும் செய்யவேண்டும் என்று விருப்பம் கொண்டேன். இதனால் இராமனாக வந்தேன். அப்போது வானரங்கள் மட்டும் அல்லாது, அணில்களும் தூய நிந்தனையுடன் தங்களால் இயன்ற கைங்கர்யங்களைச் செய்தன. அது போன்றாவது நீவிர் செய்யலாமே", என்றான். இதற்கு ஆழ்வார், "அதுவும் செய்யவில்லை", என்கிறார்.

**வ்யாக்யானம்** – (குரங்குகள் மலையை நூக்க) – மலைகளாலே கடலைத் தூர்க்கிறவிடத்தில், மலைகளுக்குத் தொகையுண்டாய்க்கொண்டு ஸ்ரீவாநர வீரர்களுக்குத் தொகையில்லாமையாலே, ஒரு மலையை அநேகர் கூடித் தொட்டுக்கொண்டு வருவார்களாய்த்து. ஒரு மலை ஒருத்தர்க்குப் பாத்தம்போராதபடி பெருமிடுக்கராயிருக்கச் செய்தேயும் உபாத்யாயன் கசைபோலே எல்லாரும் கிஞ்சித்கரித்து ஸ்வரூபம் பெறவேணுமென்றிருக்குமவர்களாகையாலே இப்படிச் செய்கிறார்களாய்த்து. ஸ்வரூப ஜ்ஞாநமுடையாரோடு இல்லாதாரோடு வாசியறத் துரும்பெழுந்தாடும்படியிறே, அடிமை கொள்ளுகிறவர் கையும் வில்லுமாய் நின்ற நிலைதான். (மலையை நூக்க) – கடலிலே பொகட என்னாதே, நூக்க என்றது – ஒரு திரளுக்கு ஒரு மலை விஷயமாகப் போராமையாலே வேறேயொரு திரள் வந்து பற்ற, அவர்கள் பக்கலிலே நூக்கி, இப்படி கைமேலே போயாய்த்து மலை கடலிலே புகுவது. அவகாஹ்யார்ணவம் ஸ்வப்ஸ்யே என்று கொண்டு, பெருமாளுக்கு ஆற்றாமை கரைபுரண்டு செல்லாநிற்க, அக்காரியத்துக்கு வேண்டுவார் ப்ரவர்த்தியா நின்றார்களென்று ஆறியிருக்கவொண்ணாதிறே. "கடல் தூர்ப்புண்டு அக்கரைப்பட்டதாய் விடவற்றே" என்னும் த்வரையாலே எல்லாருமொக்க ப்ரவர்த்தித்தாராய்த்து.

**விளக்கம்** - (குரங்குகள் மலையை நூக்க) – மலைகளைக் கொண்டு கடலின் குறுக்கே அடைத்தபோது, அங்கு வானரங்கள் இருந்த எண்ணிக்கை அளவிற்கு மலைகள் இல்லை. ஆகவே ஒரு மலையைப் பல வானரங்கள் சேர்ந்து ஒன்றாகத் தூக்கி வந்தனர். ஒவ்வொரு வானரமும் ஒரு பெரிய மலையைத் தனியாகவே, ஒரு சிறு கல்லைத் தூக்குவது போன்று தூக்கும் வலிமை உடையது என்றாலும், தங்கள் எண்ணிக்கை அளவு மலைகள் இல்லாத காரணத்தால் ஒரு மலையைப் பலரும் தூக்கினர். பள்ளியில் ஆசிரியர் ஒரு மாணவனைப் பிரம்பு எடுத்து வரும்படிக் கூறினால், அவர் கூறியதைக் கேட்கவேண்டும் என்ற ஆர்வம் காரணமாகப் பல மாணவர்கள் சேர்ந்து அந்தச் சிறு பிரம்பை தூக்கி வருவார்கள் அல்லவோ? இதே போன்று இங்கும் கொள்ளவேண்டும். இப்படிக் கைங்கர்யம் செய்யும் புத்தி வானரங்களுக்கு வருமோ என்றால் – கைங்கர்யம் கொள்ளும் ஸ்வாமியான அவன்

வில்லும் கையுமாக நிற்கும் இராமனைக் காணும்போது, ஸ்வரூபஜ்ஞானம் உள்ளவர்கள் மற்றும் அந்த ஞானம் இல்லாதவர்கள் என்னும் வேறுபாடு இல்லாமல் துரும்பு போன்றவர்களும் கைங்கர்யம் செய்வார்கள். (மலையை நூக்க) – ”மலைகளைக் கடலில் போட” என்று கூறாமல், “நூக்க” என்று ஏன் கூறவேண்டும்? ஒரு வானரக்கூட்டம் ஒரு மலையைத் தூக்கிக் கொண்டு வருகின்றனர். அப்போது அடுத்த கூட்டம் அவர்களுடமிருந்து அந்த மலையை அப்படியே பற்றுகின்றனர். ஆக மலையானது ஒரு கூட்டத்திலிருந்து மற்றொரு கூட்டத்திற்கு அப்படியே கைகள் மேலேயே நகர்ந்து செல்வதால் இந்தப் பதம் இடப்பட்டது. இராமாயணம் யுத்தகாண்டம் – அவகாஹ்யார்ணவம் ஸ்வப்ஸ்யே – லக்ஷ்மணா! உன்னைக் காணும்போது சீதையின் நினைவு உண்டாவதால், நான் கடலில் இறங்கி உறங்கப் போகிறேன் – என்று இராமன் சீதையின் பிரிவு தாங்காமல் தவிப்பதை வானரங்கள் பார்த்தனர். ஆகவே மிகுந்த வேகத்துடன் கடலை அடைக்கும் பணியில் ஒவ்வொருவரும் ஈடுபட்டனர். அவர்களின் மனதில், “இந்தக் கடல் எப்போது அடைக்கப்படும்? நாம் எப்போது அக்கரைக்குச் செல்லப் போகிறோம்?”, என்ற ஆர்வம் மிகுதியாக இருந்ததால், ஒவ்வொருவரும் ஒத்த செயலைச் செய்தனர்.

**வ்யாக்யானம்** – (குளித்து இத்யாதி) – ஸ்ரீவாநரவீரர்களுடைய த்வரைதான் அணில்களுக்குப் போந்திராமையாலே, “பெருமாளுக்கு ஆற்றாமை கரைபுரளா நிற்க, முதலிகளுக்கு இத்தனை மெத்தனவெல்லாம் என்தான்? இருந்தபடியால் சடக்கெனக் கடலடைக்கிறவர்களுக்கு சக்தி இல்லை; ஆன பின்பு, மலையாலே தூர்ப்புண்ட ப்ரதேசத்துக்கு மணல் சுமக்கப் பரிகரமில்லையிறே”, என்று அணில் நீரிலே புக்குத் தோய்கையும், கரையிலே ஏறினால் மணல் தொற்றுகையும், உதறினவாறே விட்டுக் கழிகையும், இவை முன்பே கைகண்டபடியாலே, இப்ரகாரத்தாலே கடலைத் தூர்ப்போமென்று பார்த்துக் கடலிலே புக்கு முழுகுமாய்த்து. இம்முழுக்கு தன்னாலே நீர் சுவறும், மணலும் கொண்டுவரலாமென்றாய்த்து நினைவு. (தாம்) – கடலிலே நீர் சுவறுவதும் மணல் தொற்றுவதும் தம்முடம்பினளவிலே என்றறியாதாய்த்து அடிமையில் த்வரையாலே. தாழ்வுபட்ட கார்யமடங்கத் தங்களாலே தலைக்கட்டுகிறதாக அபிமாநித்துத் திரிகிறபடியாலே “தாம்” என்னவுமாம். (புரண்டிட்டோடி) – புக்க மலைகளுக்கு நேரே மணல் புக்குச் சொரிந்துகொண்டு வருகிறபடி போராதென்று பார்த்து, மணலிலே புரண்டோடித் திரியாநிற்குமாய்த்து; உள்ள மணலும் வழியிலே உதிரும்படியாக ஓட, இடையிலே நின்றவர்கள் இவற்றின் த்வரையைக் கண்டு, “ஏன்தான் இத்தனை வேகம்?” என்றால் – “பெருமாளுக்குப் பகலமுது லங்கையில் வடக்குவாசலில் விடுவித்த தாயிருக்கும்; உங்களுக்கு த்வரையற்றிருந்தீர்” என்னுமாய்த்து. ருசியானது தந்தாமளவைப் பார்க்கவொட்டாதிறே.

**விளக்கம்** – (குளித்து) – வானரங்களின் வேகமானது கடலை அடைக்கப் போதுமானதாக இல்லை என்று அங்கு இருந்த அணில்கள் எண்ணின. அவை தங்களுக்குள், "இராமனுக்குச் சீதையைப் பிரிந்த வேதனை கரைபுரண்டு நிற்கிறது. இதனை உணராமல் இந்த வானரங்கள் பொறுமையாக ஏன் வேலை செய்கின்றனர்? மேலும் இந்தக் கடலை வேகமாக அடைப்பதற்குப் போதுமான சக்தி இவர்களிடம் இல்லை போலும். ஒவ்வொரு மலைகளுக்கும் இடையே உள்ள இடைவெளிகளை அடைக்க மணல் தேவை. அந்த மணலைக் கொண்டு போக இவர்களிடம் ஆள் இல்லை போலும்", என்று பேசிக் கொண்டன. ஆகவே அந்த அணில்கள் கடல்நீரில் சென்று தங்களது உடல்களை நனைத்துக் கொண்டன. அதன் பின்னர் கரையில் அவை நடக்கும்போது, அவற்றின் மீது அங்கிருந்த மணல் ஒட்டிக்கொண்டது. அவை நேராக மலைகளின் இடைவெளிகளில் அந்த மணலைச் சென்று உதறின. இப்படியாக இவையும் கடலை அடைக்க உதவின. அவை தங்கள் மனதில், "இப்படியே செய்தால், கடலும் விரைவாக வற்றிவிடும்; மணலும் கொண்டு வந்து சேர்த்தது போன்று ஆகும்", என்று எண்ணின. (தாம்) – இத்தனை சிறிய உடல் கொண்ட அணில்களால் கடலையும் வற்றச் செய்ய இயலாது, இவற்றால் இடைவெளிகளும் பெரிதளவில் அடைக்கப்படாது. ஆனாலும் இராமனுக்குக் கைங்கர்யம் செய்ய வேண்டும் என்ற வேகம் காரணமாக அணில்கள் இவ்விதம் எண்ணின என்று கருத்து. வானரங்கள் செய்ய இயலாத செயலைத் தாங்கள் செய்வதாக அணில்கள் எண்ணியபடி ஓடுவதால், "தாம்" என்ற பதத்தை இட்டார். (புரண்டிட்டு ஓடி) – மலைகளுக்கு அருகில் உள்ள மணலில் புரண்டு, அதன் பின்னர் நீண்ட தூரம் ஓடுகின்றன. இதன் காரணம், அதிக தூரம் சென்றால் அதிகமான மண் தங்கள் மீது ஒட்டிக் கொள்ளும் என்று எண்ணுகின்றன போலும். இவற்றின் வேகத்தைக் கண்டு அங்கிருந்த வானரங்கள் இவற்றிடம், "ஏன் இத்தனை வேகமாக ஓடுகின்றீர்கள்?", என்றனர். உடனே அந்த அணில்கள், "எம்பெருமானான இராமனுக்கு பகல் உணவானது கடலைக் கடந்து, இலங்கைக்குச் சென்று, அங்குள்ள வடக்கு வாசலில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று நாங்கள் எண்ணம் கொண்டுள்ளோம். இதற்கு விரைவாகக் கடலை அடைக்க வேண்டும். ஆனால் இந்த வேகம் உங்களிடம் இல்லையே", என்று கூறியபடி ஓடுகின்றன. பெரியபெருமாளின் கைங்கர்யத்தில் ஆர்வம் கொள்பவர்கள், தங்களால் அந்தச் செயல்களைச் செய்ய இயலுமா என்று ஆராய்ந்து பார்க்க முடியாமல், அந்த கைங்கர்ய வேகம் தடுத்துவிடுகிறது.

**வ்யாக்யானம்** – (தரங்கநீர் அடைக்கலுற்ற) – திரையையுடைத்தாய்க் கிளர்ந்திருந்துள்ள கடலை அடைக்கையிலே சமைந்த. (உற்ற) – கடல் அடைக்கிறார்கள் தாங்களாய், முதலிகளும் தங்களுக்கு எடுத்துக் கைநீட்டுகிறவர்களாயாய்த்து இவற்றினுடைய அபிமாநம். (சலமிலாவணிலும் போலேன்) – இவற்றினுடைய வ்யாபாரம் அங்குத்தைக்குக் கிஞ்சித்காரமாய்ப் பலிப்பதொன்றில்லையாகில் அடிமையாகிறபடி எங்ஙனே என்னில், அடிமை

கொள்ளுகிறவனுக்கு இவற்றின் பாவசுத்தியே அமையும் என்கை. சலமிலாமையாவது – “கடல் தூர்ப்புண்டு பெருமாள் அக்கரைப்பட்டாராகவல்லரே” என்கிற பாவத்தில் புரையற்றிருக்கை. சலம் – சலிப்பு, இலா – இல்லாமை, நின்றநிலை பேராதே நிற்கை. சாஸ்த்ரவச்யதையுமின்றிக்கே, வர்ணாச்ரம நியமமுமின்றிக்கே, ஹஸ்தபாதாதி கரணமுமின்றியிலேயிருக்கிற திர்யக்ஸாமாந்யமாத்ரமான இவை, குளிப்பது ஓடுவது புரளுவதாகிற இவற்றினுடைய பாவமும் எனக்கு இல்லையென்று, “குளித்து மூன்றனலை – ஒளித்திட்டேன்”, என்கிறார். சலம் – வ்யாஜம். அவாப்த ஸமஸ்த காமனுக்கு, எதிர்த்தலையில் பாவசுத்தியொழிய அவனுக்கு வேண்டுவதொன்றில்லை; இவனால் செய்யலாவதுமொன்றில்லை; “நமக்குள்ள ஜ்ஞாந சக்திகளைக் கொண்டு பூர்ணனுக்கு நாமொன்று செய்கையாவதென்?”, என்று கைவாங்குமவர்கள் பாக்யஹீநர். “அந்தப் பூர்த்திதான் நாமிட்டதுகொண்டு த்ருப்தனாகைக்குறுப்பு” என்று சுத்தபாவராய் மேல்விழுகைக்குக்குறுப்பாம் பாக்யவான்களுக்கு. இப்பாவசுத்திதான் ஒருவர்க்கும் கிடையாமையாலே எல்லார்க்கும் செய்யலாவதொன்றென்னவொண்ணாது. ஆக அணில்களுக்குள்ள ஆநுகூல்யமும் எனக்கில்லை என்கிறார்.

**விளக்கம்** – (தரங்கநீர் அடைக்கல் உற்ற) – அலைகளைக் கொண்டதாகவும், பொங்குவதாகவும் உள்ள கடலை அடைப்பதில் முயன்றுள்ள. (உற்ற) – இந்த அணில்கள் உண்மையில் தாங்களே கடலை அடைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும், வானரங்கள் தங்களுக்குத் தேவையான கள் முதலானவற்றை எடுத்துக் கொடுக்கும் பணியாட்கள் என்றும் எண்ணியபடி வேலை செய்கின்றன. (சலம் இலா அணிலும் போலேன்) – இந்த அணில்களின் செய்யும் செயல் மூலம் அங்கு கடலை அடைத்தல் என்னும் செயலுக்குச் சிறிதும் பயன் இல்லை என்றபோதிலும், இவை செய்பவற்றை ஏன் இராமனின் கைங்கர்யமாகக் கொள்ளவேண்டும் என்ற கேள்வி எழலாம். கைங்கர்யத்தைக் கைக்கொள்ளும் எம்பெருமான் - ஒருவன் செய்யும் கைங்கர்யத்தைக் காட்டிலும், எந்தவிதமான பலனும் எதிர்பாராமல் கைங்கர்யம் செய்யும் எண்ணத்தை மட்டுமே பெரிதாக எடுத்துக் கொள்கிறான். இதுவே சலம் இல்லாமை ஆகும். அணில்களுக்கு இந்தச் சலம் இல்லாமை அப்படி என்றால் – இராமன் மிகவும் விரைவாக அக்கரைக்குச் செல்லவேண்டும் என்ற ஆர்வம் மேலிட செயல்கள் செய்கின்றன அல்லவா, அந்த எண்ணமே ஆகும். சலம் என்பதைச் சலிப்பு என்று கொண்டு, நின்ற நிலை மாறாமல் உள்ளதைக் கொள்ளலாம். “இந்த அணில்கள் மனிதர்கள் போன்று சாஸ்த்ரங்களை அறியக்கூடிய பிறவி கொண்டவை அல்ல, வர்ணாச்ரம தர்மங்களுக்கு உட்பட்டவை அல்ல, கைங்கர்யம் செய்வதற்கு ஏற்ற கைகால்களைக் கொண்டவையும் அல்ல. இத்தனை தாழ்வான விலங்குப் பிறவிகளாக இருந்தும் இவை குளித்து, ஓடி, புரண்டு இராமனுக்குக் கைங்கர்யங்கள் செய்கின்றன.

இத்தகைய செயல்கள்கூட என்னிடம் இல்லையே", என்கிறார். இதனை திருமாலை (25) – குளித்து மூன்றனலை – என்பதன் மூலமும், இந்தப் பாசுரம் மூலமும் வெளிப்படுத்துகிறார். சலம் என்றால் வ்யாஜம், இதன் மூலம் பயனைக் கூறுகிறார். தனது அனைத்து விருப்பங்களும் நிறைவேறப் பெற்ற எம்பெருமான், ஜீவனிடம் உள்ள "பயனை எதிர்பாராமல், எம்பெருமானுக்காகச் செய்யும் கைங்கர்யம்" என்ற நல்லெண்ணம் தவிர வேறு எதனையும் எதிர்பார்ப்பதில்லை. எம்பெருமானுக்கு ஜீவன் செய்யக்கூடிய உதவி என்பது உண்மையில் ஏதும் அவசியம் இல்லை. ஆனால், "எம்பெருமானோ தனக்கு வேண்டிய அனைத்தையும் கொண்டவனாக உள்ளான். இப்படி உள்ளபோது, நமக்கு உள்ள அற்பமான ஞானம், சக்தி போன்றவற்றைக் கொண்டு அவனுக்குப் பெரிதாக நாம் என்ன செய்ய இயலும்?", என்று எண்ணியபடி கைங்கர்யம் செய்யாமல் சிலர் இருக்கக்கூடும். இவர்கள் அவனுக்குக் கைங்கர்யம் செய்யும் பாக்கியத்தைப் பெறாதவர்களே ஆவர். மேலும் சிலர், "எம்பெருமான் பரிபூர்ணமான குணங்கள் கொண்டவன் என்பதால், நாம் அளிக்கும் அற்பமானவற்றையும் ஏற்று மனநிறைவு கொள்வான்", என்று எண்ணக்கூடும். இப்படியாக எந்தவிதமான பலனும் எதிர்பாராமல் அவனுக்குக் கைங்கர்யம் செய்பவர்கள் பாக்கியம் செய்தவர்கள் ஆவர். இப்படியாக எந்தவிதமான பலனும் கருதாமல் அவனுக்குக் கைங்கர்யம் செய்யும் எண்ணம் யாருக்கும் அத்தனை எளிதாக உண்டாகாது என்பதால், அனைவராலும் எளிதாகக் கைங்கர்யம் செய்துவிட இயலாது. இப்படி பலன் கருதாமல் கைங்கர்யம் செய்த அணில்களுக்கு இருந்த நிலை கூட தனக்கு இல்லையே என்று வருந்துகிறார்.

**வ்யாக்யானம் –** (மரங்கள்போல் வலிய நெஞ்ச வஞ்சனேன்) – இவ்விஷயத்தில் தம் நெஞ்சில் நெகிழ்ச்சியில்லாதபடிக்கு த்ருஷ்டாந்தம் சொல்லுகிறார். "இரும்புபோல் வலிய நெஞ்சம்" என்றவர் அதுக்கும் அவ்வருகே ஒரு வன்மை சொல்லுவதற்காக "மரங்கள்போல் வலிய நெஞ்சம்" என்கிறார். அக்நியிலேயிட்டு உருக்கி நினைத்த கார்யம் கொள்ளலாம் இரும்பு; இத்தை நெருப்பிலிட்டால் கரிந்துபோய் முன்பு நின்ற நிலையும் கெடுமித்தனையிறே. (வஞ்சனேன்) – இப்படி நெஞ்சு திண்ணியதாக இருக்கச்செய்தே இது த்ரவத்ரவ்யமோவென்று தேவரீரும் ப்ரமிக்கும்படி பாவித்துக் காட்டாநிற்பன். அகவாயில் நினைவு ஒன்றாயிருக்க, "இவனத்தனை பகவத்ப்ரேமமுடையாரில்லை" என்று ப்ரமிக்கும்படி மறைத்து வர்த்திப்பன். "இறையிறையுருகும் வண்ணம்" என்று கீழ் சொன்னத்தை அநுசயிக்கிறார். (நெஞ்சு தன்னால் அரங்கனார்க்காட்செய்யாதே) – அணில்கள் பக்கலிலும் பாவசுத்தியேயிறே உள்ளது. அந்நெஞ்சைக் கொண்டு ஸந்நிஹிதனான உன் பக்கலிலே அல்பாநுகூல்யமும் பண்ணாதே, இந்த பாவசுத்தி மாத்ரத்தையே பரிபூர்ண சேஷவ்ருத்தியாய்க் கொள்ளும் பகவதபிப்ராயத்தாலே "ஆள் செய்யாதே" என்கிறார். (அளியத்தேன்) – அஹம் ஸர்வம் கரிஷ்யாமி என்னும் இளையபெருமாளைப்போலே, ஸர்வவித கைங்கர்யங்களுக்கும் அர்ஹமான அருமந்த வஸ்துகிடீர் இது. (அயர்க்கின்றேனே) – விஸ்மரித்து

அநர்த்தப்பட்டுப்போவதே! இவ்விஷயம் ஸந்நிஹிதமல்லாமையாலேயாதல், இத்தலையில் யோக்யதை இல்லாமையாலேயாதலன்றிறே; “மறந்தேனுன்னை முன்னம்” என்கிறபடியே விஸ்ம்ருதியாலேயிறே அநர்த்தப்பட்டது.

**விளக்கம்** – (மரங்கள் போல் வலிய நெஞ்ச வஞ்சனேன்) – எம்பெருமான் விஷயத்தில் தனது உள்ளமானது ஈடுபாடு இல்லாமல் உள்ளதற்கு ஓர் உதாரணம் காட்டுகிறார். பாசுரம் 17ல், “இரும்பு போல் வலிய நெஞ்சம்”, என்றார். இங்கு அந்த இரும்பைக் காட்டிலும் வலிமையானதை உணர்த்த, “மரங்கள் போல் வலிய நெஞ்சம்”, என்றார்.இதன் கருத்து என்னவென்றால் – இரும்பை நெருப்பில் வைத்து அடித்தால், நாம் வேண்டும்படி அது வளைந்து கொடுத்துவிடும்; ஆனால் மரத்தை நெருப்பில் இட்டால் எதற்கும் பயன் இல்லாதபடி ஆகிவிடும்; ஆக இந்த மரங்கள் இரும்பைக் காட்டிலும் வலியவை; இது போன்று தனது உள்ளத்தைக் கூறுகிறார். (வஞ்சனேன்) – இப்படி எனது உள்ளம் மிகவும் கடினமாக உள்ளது. ஆனாலும் பெரியபெருமாளான நீ இதனைக் கண்டவுடன், ”இத்தனை எளிதாக உருகும் பொருள் இவனது உள்ளத்தைக் காட்டிலும் வேறு உள்ளதோ?”, என்று மயங்கும்படியாக நான் உன்னிடம் வேஷம் போடுகிறேன். எனது உள்ளத்தில் மற்ற சிந்தனைகள் பலவும் இருக்க மற்றவர்கள் என்னைக் காணும்போது, “இவனைக் காட்டிலும் பெரியபெருமாளிடம் ஈடுபாடு கொண்டவர்கள் வேறு யாரும் இல்லை”, என்று எண்ணும்படியாக எனது எண்ணங்களைப் போலியாக மறைத்து நிற்கிறேன். பாசுரம் 17ல், “இறை இறை உருகும்வண்ணம்” என்று கூறியதும் போலியே என்கிறார். (நெஞ்சு தன்னால் அரங்கனார்க்காட்செய்யாதே) – தங்களது உயர்ந்த சிந்தனை காரணமாக அணில்கள் எம்பெருமானுக்குப் பயன் கருதாமல் கைங்கர்யம் செய்தன; நீ எனக்கு அளித்த உள்ளத்தைக் கொண்டு, மிகவும் அருகில் உள்ள உனக்குச் சிறிதாவது கைங்கர்யம் செய்து உன்னிடம் ஈடுபடலாம், அதனையும் நான் செய்யாமல் உள்ளேன். ”ஆள்செய்தல்” என்னும் பதம் பூர்ணமான கைங்கர்யத்தை மட்டுமே குறிக்கும், இது போன்ற சிறிய அளவிலான கைங்கர்யத்தையும் குறிக்குமோ என்ற சந்தேகம் எழலாம். பயன் கருதாமல் செய்கின்ற கைங்கர்யம் சிறிய அளவாக இருந்தாலும், அந்த நல்லெண்ணம் காரணமாக, அத்தகைய கைங்கர்யமும் பூர்ணமானதே என்று எம்பெருமான் கொள்கிறான். ஆகவே சிறிய கைங்கர்யங்களும் இந்தப் பதம் மூலம் கூறப்படலாம் என்று கருத்து. (அளியத்தேன்) – “அஹம் ஸர்வம் கரிஷ்யாமி – இராமா! உனக்கு அனைத்துவிதமான கைங்கர்யங்களும் நான் செய்வேன்” என்று லக்ஷ்மணன் கூறுவது போன்று, ஸ்ரீரங்கநாதனுக்கு அனைத்துவிதமான கைங்கர்யங்களும் செய்வதற்கு ஏற்ற தகுதி படைத்த ஆத்மா அல்லவோ இது? இப்படி வீணாக உள்ளதே என்கிறார். (அயர்க்கின்றேனே) – அருகில் உள்ள பெரியபெருமாளை மறந்து இப்படி தகாதவற்றைச் செய்கின்றேனே. இப்படி பெரியபெருமாள் அருகில் இருந்தும் இல்லாமல் உள்ளவனாக ஆகிவிட்டான். இந்த நிலை, அவனுக்குக் கைங்கர்யம் செய்யும் தகுதியை நான் இழந்தேன் என்பதால் ஆனது என்றாலும்,

அதற்காக நான் பெரிதும் வருந்தவில்லை. ஆனால், பெரியதிருமொழி (6-2-2) – மறந்தேன் உன்னை முன்னம் – என்பதற்கு ஏற்ப அவனை மறந்துவிட்டதால் பெரிதும் வருந்துகிறேன்.

தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

... தொடரும்